பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 19 சனிக்கிழமை (03-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:221

- 3 JUL 2004

# ஜனாதிபதியுடனான பேச்சின் பெறுபேறை பாலாவிடம் விளக்குவார் சொல்ஹெய்ம்!

## புதனன்று லண்டனில் சந்திப்பு

கொழும்பு,ஜூலை3

**வன்னியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த பின்னர், நேற்றுமுன்தினம் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கலந்துரையாடிய நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் அன்றைய தினமே கொழும்பிலிருந்து புறப்பட்டார்.**

**புதுடில்லியில் இந்திய அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் ஒஸ்லோ திரும்பும் வழியில் எதிர்வரும் புதனன்று லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை அவர் சந்திப்பார். அப்போது ஜனாதிபதி குமாரதுங்கவுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் பெறுபேறை அவர் பாலசிங்கத்துக்கு விளக்குவார் எனத் தெரிகின்றது.**

இதேசமயம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார். அவர் விரைவில் கிளிநொச்சிக்குச் சென்று, ஜனாதிபதியுடனான சந்திப்பின் பெறுபேறு குறித்து புலிகளின் தலைமைக்கு விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வே அனுசரணையாளர் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், தமது நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் சகிதம் புதுடில்லி செல்கின்றார்.

நாளைமறுதினம் புதுடில்லியில் இந்திய அரசு அதிகாரிகளை அவர்கள் சந்திப்பர். இலங்கை இனப்பிரச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால அதிகாரம் குறித்து பேச அரசுக்கு உரிமையில்லை

### ஜே.வி.பி. அதனை அனுமதிக்காதாம்

கொழும்பு,ஜூலை3

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதி வழிவகைகள் பற்றி ஆராயாமல், விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டும் அவர்களுடன் பேசுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு எந்த வித உரிமையும் இல்லை - இப்படிக் கூறுகின்றார் ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கிறார் அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளின் போக்கில் சென்று அப்படியொரு பேச்சு ஆரம்பித்தால் அதை மாற்றியமைக்க ஜே.வி.பி. அதில் தலையிட்டு தனது முழு சக்தியையும் பயன்படுத்தும்.

ஜனாதிபதி, விடுதலைப் புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்தே முதலில் பேசுவார் என்று, ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இவை அரசின் உத்தியோகபூர்வமான செய்திகள் அல்ல.

புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## படை அதிகாரிகளுடன் நேற்று விடுதலைப் புலிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை3

குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தடையாகவுள்ள பிரச்சினைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளும் படை அதிகாரிகளும் நேற்றுக் கலந்துரையாடினர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கண்காணிப்புக் குழு யாழ்.அதிகாரி தலைமையில் நடந்த இந்தச் சந்திப்பில் யாழ். படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலா, சிரேஷ்ட பொலீஸ் அத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

## தாயக மீட்பில் ஆகுதியானோர் நினைவாக கரும்புலிகள் தினம் திங்களன்று அனுஷ்டிப்பு

### விசேட நிகழ்வுகளுக்கு சிறப்பு ஏற்பாடுகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினத்தை நாளை மறுதினம் தமிழ்ப்பிரதேசங்கள் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைப் புலிகள் செய்து வருகின்றனர்.

"தாயக மீட்புப் போரில் தடைகளை அகற்றி ஆகுதியாகிய கரும்புலிகள் நிகழ்வு" - என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்வுகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் வன்னிப் பகுதிகளில் கரும்புலிகள் தினத்தை அனுஷ்டிக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இம்முறையும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் பிரதேசங்களிலும் இத்தினம் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படும் என ஏற்பாட்டுக்குழுக்கள் தெரிவித்தன.


கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு குடாநாடெங்கும் பதாகைகள், சிவப்பு - மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. சிரமதானங்கள் உட்பட பொதுச் சேவைகளில் பலரும் ஈடுபட்டுள்ளனர்.

பிரதான அஞ்சலி நிகழ்வுகள் யாழ். குடாநாட்டில் நெல்லியடி மற்றும் புங்குடுதீவு ஆகிய இரு இடங்களிலும் இடம்பெறவுள்ளன.

5ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு முதற்கரும்புலி மில்லர் ஆகுதியான இடமான நெல்லியடி மத்திய கல்லூரி மில்லர் சதுக்கத்தில் கரும்புலிகள்தின பிரதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நெல்லிடிச் சந்தியில் இருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் பான்ட்

(16ஆம் பக்கம் பார்க்க)



கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு குடாநாட்டில் பவனிவரும் நினைவு ஊர்தி. *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## துணைவேந்தர்களின் கூட்டம் இன்று யாழ். பல்கலையில்!

யாழ்ப்பாணம்,ஜூலை3

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் கூடுகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை நடைபெறும் இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஏனைய பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக வந்துள்ள துணைவேந்தர்கள் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### இராணுவத்தினர் தொடர்பாக

## கண்காணிப்புக் குழுவிடம் திருமலை பொறுப்பாளர் புகார்

திருகோணமலை,ஜூலை3

திருகோணமலை புல்மோட்டை கிராமத்துக்கு அரசியல் பணிக்காகச் சென்ற தன்னை அங்கு செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்தனர் என்று விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று முறையிட்டார்.

எழிலன் உட்பட அரசியல் துறை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இளையோர் விளையாட்டு விழாவுக்காக வீரர், வீராங்கனைகள் நகரில் குவிந்தனர்

### கோலாகலமாகப் போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் (பொது விளையாட்டு மைதானம்) இன்று காலை 8.30மணிக்கு ஆரம்பமாகவுள்ள தமிழீழ இளையோர் தேசிய தடகளப்போட்டியில் கலந்துகொள்வதற்காக வடக்கு - கிழக்கின் பல பாகங்களில் இருந்தும் வீர, வீராங்கனைகள் வந்து யாழ். நகரில் குவிந்துள்ளனர்.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் இன்றும், நாளையும் இந்த விளையாட்டு விழா நடைபெறுகின்றது.

மூவினங்களையும் சேர்ந்த ஆயிரத்து 500 வீர,வீராங்கனைகள் இந்தப் போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ். வருகைதந்துள்ளனர்.

வெளிமாவட்டங்களில் இருந்த வருகை தந்த வீர, வீராங்கனைகள் யாழ். மத்திய கல்லூரியிலும், வேம்படி மகளிர் கல்லூரியிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். போட்டி நடுவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் யாழ். மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் அணி ஒழுங்கினைத் தொடர்ந்து பொதுச் சுடர் ஏற்றல், தேசியக்கொடி ஏற்றல், அகவணக்கம் போன்றன இடம்பெறும். யாழ். மத்திய கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் இசைக் குழுவினரின் அணிவகுப்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நினைவு ஊர்தி குடாநாடெங்கும் பவனி

யாழ்ப்பாணம்,ஜூலை3

ஈழப்போராட்டத்தில் தம்முயிரை ஆகுதியாக்கிய கரும்புலி மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லப்படவுள்ளது.

ஊர்தி பவனி வரும் வீதிகளில் கூடி நின்று மாவீரர்களுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்ற வசதிகளை பொது அமைப்புக்கள் மேற்கொண்டுவருகின்றன.

இன்று காலை 8 மணி முதல் 9.30 மணிவரை தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழா இடம்பெறும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் அஞ்சலிக்காக ஊர்தி நிறுத்தப்பட்டிருக்கும்.

முற்பகல் 9.30 மணியளவில் அங்கிருந்து புறப்படும் ஊர்தி மானிப்பாய் வீதி ஊடாக ஓட்டுமடம் சந்தி, ஆனைக்கோட்டை பள்ளங்காட்டுச்சந்தி உதய சூரியன், சனசமூக நிலையம் ஆகியவற்றில் தரித்துநிற்கும்

முற்பகல் 10.30 மணிக்கு மானிப்பாய் நகர், 10.45 மணிக்கு மருதடிச் சந்தி, 11மணிக்கு சீரணிச்சந்தி, 11.30 மணிக்கு சங்கானை நகர், 12மணிக்கு சித்தன்கேணி சந்தி, 12.15 மணிக்கு வடலியடைப்பு ஆகிய இடங்களுக்கு ஊர்திவரும்.

அதைத்தொடர்ந்து பண்டத்தரிப்பு,

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை திறப்புவிழாவில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையுரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினரான சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் மேற்படி பாடசாலை மாணவர்கள் இறைவணக்கம் பாடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பிடிப்பாளர்)

### அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்த

# பட்டதாரிகள் மீது தாக்குதல்: சீறுகிறது ஜே.வி.பி.தலைமை!

கொழும்பு,ஜுலை3

கொழும்பில் இலங்கை வங்கித் தலைமையகத்துக்கு முன்னால் சத்தியாக்கிரகம் செய்த பட்டதாரிகள் மீது பொலீஸார் காட்டுமிராண்டித்தனமாகத் தடியடிப் பிரயோகம் செய்ததை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

முன்னைய அரசின் 'தருண அருண' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இந்தப் பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகரன்.

"ஜே.வி.பி. இயக்கம் உருவாகுவதற்குக் காரணமாக அமைந்ததே வேலை இல்லாப் பிரச்சினைதான். மாறிமாறி வந்த அரசுகள் இளைஞர் சமூகத்தை ஓரம்காட்டியதாலேயே நாட்டில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

"இளைஞர் சமூகத்திற்கு தகுதியான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடனேயே அரசுடன் இணைந்தோம்.

"இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க முன்னைய அரசு நடைமுறைப்படுத்திய 'தருண அருண' இளைஞர் வேலை வாய்ப்புத் திட்டத்தைத் தொடர்ந்தும் கொண்டு செல்ல அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

"இத்திட்டத்தின் கீழ் அரச வங்கிகளில் பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகள்தான் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் எனக் கோரி சத்தியாக்கிரகம் இருக்கின்றனர். கடந்த ஆறு தினங்களாக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த இளைஞர்கள் மீது நேற்றுமுன்தினம் திடீரெனப் பாய்ந்த பொலீஸார் அவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தி விரட்டி அடித்துள்ளனர்.

"இந்த நடவடிக்கை இந்த அரசின் கொள்கைக்கே நேர் விரோதமானது. பொலீஸாருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தது யார்?" - எனக் கேள்வி எழுப்பும் ஜே.வி.பியின் சந்திரசேகரன் எம்.பி. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பியின் மற்றொரு பிரமுகரான அமைச்சர் லால் காந்த சில தினங்களின் முன் சத்தியாக்கிரகிகளை நேரடியாகச் சந்தித்து, அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில் அமைதியாக சத்தியாக்கிரகம் நடத்திய பட்டதாரிகள் மீது பொலீஸ் தாக்குதல் இடம்பெற்றமை ஜே.வி.பி. வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவையில் தாம் கேள்வி எழுப்பப் போகிறார் எனவும், அதே வேளை, இந்த இளைஞர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக விசாரணை நடத்த ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வற்புறுத்தப்படும் எனவும் அமைச்சர் லால் காந்த கூறியுள்ளார் என்று சந்திரசேகரன் எம்.பி. குறிப்பிட்டார். (க)

### கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,ஜுலை3

யாழ். மாவட்டத்தில் உள்ள கீழ் உழைப்புப் பட்டதாரிகளுக்கான விசேட கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல கீழ் உழைப்புப் பட்டதாரிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் எஸ்.பற்குணராஜா கேட்டுள்ளார். (எ-10)

★ ★ ★

கைதடி,ஜுலை3

சாவகச்சேரி பிரதேச சபையினால் அதன் உப பணிமனை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட உப சமாச உறுப்பினர்களுக்கான கலந்துரையால் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாம் கலாசார மண்டபத்தில் சமாசத்தலைவர் த.இராசரத்தினம் திலைமையில் நடைபெறவுள்ளது. (எ-75)

### கலைமன்ற ஆண்டுவிழா

வடமராட்சி,ஜுலை3

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 42ஆவது ஆண்டு விழா இன்று மாலை 6.30 மணிக்கு திருமதி சூரியகுமாரி குலேந்திரம் தலைமையில் மன்றத்தின் புவனேஸவரி கலை அரங்கத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் க.வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா.வரதராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வில்லிசை, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-173)

### சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜுலை3

புலோலி குரும்பைகட்டி ஞானவைரவர் கோயில் வருடாந்த வேள்வி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (10-173)

★ ★ ★

வடமராட்சி,ஜுலை3

தம்பசிட்டி வாணர் குடியிருப்பு ஞானவைரவர் கோயில் வருடாந்த வேள்வி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (10-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை3

ஆனைக்கோட்டை, உயரப்புலம் புனித அடைக்கலமாதா ஆலய திரு இருதயநாதர் சபையினர் தமது ஆண்டு நிறைவு விழாவை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலி பூசையுடன் கொண்டாடவுள்ளனர். (10)

## சிறுவர் மனவிருத்திப் பாடசாலை கோண்டாவிலில் நேற்றுத் திறப்பு

கோண்டாவில்,ஜுலை3

'சிவபூமி' சிறுவர் மனவிருத்திப் பாடசாலை கோண்டாவில் கிழக்கில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்துகொண்டார். அவர் நாடாவினை வெட்டிப் பாடசாலையைத திறந்துவைத்தார்.

பாடசாலையின் பெயர்ப்பலகையினை கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட ம.ஜெயசீலன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

முன்னதாக காலை 9.30 மணியளவில் கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலயததில் பூசைகள் நடைபெற்று அங்கிருந்து தெய்வத்திருவுருவப் படங்கள் எடுத்துவரப்பட்டன. பாடசாலை வாயிலில் சைவமுறைப்படி கோமாதா பூசை நடைபெற்றது.

நிகழ்வில் மங்கள விளக்கினை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சிவபூமி சிறுவர் மனவிருத்தி பாடசாலை அதிபர் திருமதி சண்முகராஜன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சமயப்பெரியார்கள் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட பெரியவர்கள் வாழ்த்துரைகளை வழங்கினர்.

சிறப்பு நிகழ்வாக சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் கலைநிழ்வுகள் இடம்பெற்றன. (ஒ-9-49)

## இசைநாடக விழாவில் இன்று

யாழ்ப்பாணம்,ஜுலை3

திருமறைக்கலாமன்றம் நடத்தும் இசைநாடக விழாவில் இன்றைய தினம் கருத்தரங்கு, இசை நாடக அளிக்கை என இரண்டு அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பகல் நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் ஆரம்பமாகின்றன. யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி தலைமையில் கருத்தமர்வுகள் நடைபெறும்.

'ஈழத்தில் இசை நாடகம் - ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற தலைப்பில் திருமதி நவதர்சினியும், 'ஈழத்து இசைநாடகப் பாரம்பரியத்தின் மூலவர்கள்' என்ற தலைப்பில் பா.ரகுவரனும், 'நடிகமணி வி.வி.வைரமுத்துவும் இசைநாடகமும்' என்ற தலைப்பில் ம.சாம்பிரதீபனும் கருத்துரை வழங்குவார்கள்.

மதிய இடைவேளையைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு ஆசிரியர் திருமதி க.பகீரதி தலைமையில் பிற்பகல் அமர்வுகள் இடம்பெறும்.

'இசை நாடகத்துக்கான நாடக பாடம் ஒரு பகுப்பாய்வு' என்ற பெ[illegible]ளில் தே.தேவானந்தும், 'சமூக வா[illegible]வியல் வெளிப்பாட்டின் இசைந[illegible]கம்' என்ற பொருளில் யோ.யோண்சன் ராஜ்குமாரும் கருத்துரை வழங்குவார்கள். இரவு நிகழ்வுகள் மாலை 7 மணிக்கு மன்ற அரங்கில் ஆரம்பமாகின்றன. அண்ணாவியார் அ.பாலதாஸ் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.சொலமன் சிறில் கலந்துகொள்கிறார்.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினரும் வழங்கும் 'பத்தநந்தனார்', காங்கேசன்துறை வசந்தகானா சபாவினர் வழங்கும் 'பூதத் தம்பி' ஆகிய இசை நாடகங்கள் அளிக்கை செய்யப்படவுள்ளன. (9)

# இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு திறமையடிப்படையில் மாணவர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜுலை3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் (Media Resource Training Centre) இதழியல் டிப்ளோமா கற்கைநெறி (Diploma in Journalism) பயில்வதற்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக மூதவை வட்டாரங்கள் தெரிவித்தன.

டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் யுனஸ்கோ நிறுவன அனுசரணையில் இக்கற்கைநெறி நடைபெறும்.

எழுத்துப்பரீட்சை, நேர்முகப்பரீட்சை, தொழில்சார் பங்களிப்பு மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. வாரம் தோறும் சனி, ஞாயிறு தினங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு இக்கற்கைநெறி நடைபெறும். இதற்குத் துறைசார்ந்த உள்ளூர் மற்றும் சர்வதேச விரிவுரையாளர்கள் வள ஆளணியினராகப் பணியாற்ற உள்ளனர். சர்வதேச தரத்திலான ஊடகத்துறை அனுபவங்களையும் தொழிலசார் அறிவையும் பயிற்சியாளர் ஈட்டிக்கொள்ள இக்கற்கைநெறி உதவும்வகையில் முறைப்படி பயிற்றப்பட்ட துறைசார் ஆளணியினரை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதழியல் டிப்ளோமா கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வோரில் திறமையடிப்படையில் எதிர்காலத்தில் இதழியல் இளமாணிபட்டக் கற்கைநெறிக்கு அனுமதிக்கும நிலை பொருத்தமான திட்டமிடல்கள் மூலம் ஏற்படுத்தப்படும என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள தெரிவித்தன.

இக்கற்கைநெறி முற்றிலும் பிராந்தியத்தின் சமூகத் தேவை கருதியதாக அமையவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கற்கைநெறி தேவையான, முழுமையான ஒழுங்குகள் பூர்த்தியானதும ஆரம்பிக்கப்படும் என்றும் அதற்கு முன்பாக தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களுக்கு சில குறுகியகால பயிற்சிகளும், பயிற்சிப்பட்டறைகளும் நிகழ்த்தப்படலாம் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கற்கை நெறிக்கு நடராஜா கணேசமூர்த்தி, மகேஸ்வரன் ஜனகேஸவரன், ஜெயராஜசிங்கம் ஜெராட், செல்லப்பா கதிர்காமத்தம்பி, அப்புத்துரை லோகேசன், நவரட்ணம் பரமேஸ்வரன், இளையதம்பி சற்குணநாதன், கணேசலிங்கம் சதீஸ், சின்னத்துரை தில்லைநாதன், ஏ.ஏன்.சுப்பிரமணியம் திருச்செல்வம், திருஞாவுக்கரசு திருமயூரன், செல்வி நடேசன் செந்தமிழ்ச்செல்வி, ரட்ணம் தயாபரன், நல்லையா விஜயசுந்தரம், கனகநாயகம் வேல்தஞ்சன் ஆகியோர் திறமையடிப்படையில் முதலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர எஞ்சியிருந்த எழுபத்தைந்துக்கும் மேற்பட்டோரில் மேலும் திறமையடிப்படையில் (Reserve List in order of Merit) ஐவா தெரிவாகியுள்ளனர்.

குமாரலிங்கம் பதிதரன், இராஜகோபால் உதயகுமார், செல்வி ராஜேந்திரன் ஸ்ரீறஜனி, வரப்பிரகாசம் டொறிங ரன், பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் ஆகியோரே தெரிவாகியுள்ளனர்.

இக்கற்கைநெறி தொடர்பாக கருத்துவெளியிட்ட தமிழ்ப பிராந்தியத்தின் மூத்தபத்திரிகையாளர்கள் - புலமைசார் கற்கை நெறியாக இதழியல் கற்பிக்கப்படவிருப்பது இலங்கைத் தமிழ் ஊடகத்துறையில் பெரும்பாய்ச்சலாகும் எனத்தெரிவித்தனர்.

# தனியார் பஸ் கட்டண உயர்வு இப்போதில்லை

கொழும்பு,ஜுலை3

தனியார் பஸ் கட்டண உயர்வு இப்போதைக்கு இடம்பெறமாட்டாது என போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அறிவித்திருக்கின்றார்.

பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், அது தொடர்பான தேசியக்கொள்கைப் பிரமாணங்களின் அடிப்படையில் இவ்வருடம் பஸ் கட்டண உயர்வை மேற்கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் 6.2 வீதம் என வகுக்கப்பட்ட தனியார் பஸ் கட்டண உயர்வு அதற்கு மாறாக எட்டு வீதமாக அதிகரிக்கப்பட்டதனாலேயே இம்முறை கட்டண உயர்வினை மேற்கொள்ள முடியாதிருப்பதாக தனியார் பஸ் கட்டண உரிமையாளர்கள் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது - என்று அவர் மேலும் சொன்னார். (க)

## "சலன சித்திரம்" அமைப்பு அங்கத்தவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜுலை3

'சலனசித்திரம்' அமைப்பின் யாழ்ப்பாண அங்கத்தவர்களுக்கும் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்வரும் 6ஆம திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நெல்லியடி கிறிஸரல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த க.தேவதாஸன் கலந்துகொண்டு அமைப்பின் புதிய நடைமுறைகள் குறித்து விளக்குவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

# தாயகம் திரும்பிய அகதிகள் கைது!

தலைமன்னார்,ஜுலை3

இராமேஸ்வரத்திலிருந்து நாடு திரும்பிய 29 தமிழ் அகதிகளும் அவர்களைப் படகில் ஏற்றிவந்த நான்கு படகோட்டிகளும் இலங்கைக் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 11 மணியளவில இவர்கள் அனைவரும் கடற்படையினரால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தலைமன்னார் பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் இன்று சனிக்கிழமை காலை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனா என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-7-9)

உதயன்

## அமைதியை எட்ட.....

*"நாட்டில் யுத்தம் நடைபெறவில்லை என்பது சமாதானம் ஆகிவிடாது. இன்றைய நிலையில் யுத்தம் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்"*

இது ஒன்றும் நாங்கள் புதிதாகச் சுட்டிக்காட்டும் விடயம் அல்ல. விடுதலைப் புலிகளோடு முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு பேச்சு நடத்திய காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடிக்கடி திருவாய் மலர்ந்தருளிய கருத்துக்கள் தாம் இவை.

எப்போதும் முறிந்து விடக்கூடியதான யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றின் மேல்தான் அமைதி முயற்சிகள் - எத்தனங்கள் - என்ற சமாதானக் கட்டடத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கின்றது. அதுவும் இலங்கை ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் நன்கு தெரியும்; புரியும்.

வலுவற்ற யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பலமுள்ள தாக்கவும், அதன் மீது உறுதியான சமாதான முயற்சிகளைக் கட்டியெழுப்பவும் அடிப்படையானது - அத்தியாவசியமானது - சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இடையேயான பரஸ்பர நம்பிக்கைதான். அதனை மேம்படுத்துவதன் மூலம் மட்டுமே சமாதான வழிமுறைகளில் தீர்வு காணும் எத்தனங்களை அர்த்தமுள்ள பெறுபேறு தரத்தக்கவையாக மாற்றமுடியும் என்பது திண்ணம்.

தற்போதைய சமாதான முயற்சிகளில் நேரடியாக சம்பந்தப்பட்ட தரப்புகளில் ஒரு தரப்பின் பிரதிநிதித்துவம் மாறியதும் இந்தப் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் செயற்பாடு சீர்கெடத் தொடங்கியிருப்பது துலாம்பரமாகத் தெரிகின்றது. கடந்த தேர்தலோடு நிலைமை மோசமடைய ஆரம்பித்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகள் இரண்டு. ஒன்று தமிழர் தரப்பு, மற்றையது சிங்களவர் தரப்பு. தீர்வுக்கான இறுதிக் கட்டத்தில் மூன்றாவது தரப்பான முஸ்லிம்களும் பேச்சுக்குள் உள்வாங்கப்படுவார்கள். இதுதான் நிலைமை.

பிரதான தரப்புகளுள் ஒன்றான தமிழர் பக்கத்தில் கடந்த தேர்தல் பெரிய மாற்றம் எதையும் கொண்டு வரவில்லை. அதற்கு மாறாக, அவர்களின் பிரதிநிதித்துவத்துக்கு மேலும் உறுதிக்கு உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. அவர்களின் ஏகப்பிரதிநிதிகளாகப் பேச்சில் கலந்துகொள்ள வேண்டியவர்கள் புலிகளே என்பது ஜனநாயகமுறை வாயிலாகவும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சமாதான முயற்சியில் சம்பந்தப்பட்ட இரண்டாவது பிரதான தரப்பு இலங்கை அரசு. அதாவது சிங்களத் தலைமை. அது கடந்த பொதுத்தேர்தல் மூலம் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. அமைதி முயற்சிகளில் அதிக சமரசப் போக்கைக் காட்டக் கூடியது எனக் கருதப்பட்ட ஐ.தே.க.மிதவாதத் தலைமை தேர்தல் மூலம் தூக்கி வீசப்பட்டு, பேரினவாதமும் தீவிரப்போக்குமுடைய பங்காளகளைக் கொண்ட அரைகுறைக் கூட்டரசு இலங்கைத் தரப்பை - சிங்களத் தரப்பை - பிரதிநிதித்துவப்படுத்த வந்து குந்தியிருக்கின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளில் பின்னர் ஒரு கட்டத்திலேனும் ஒரு தரப்பாகச் சேரவேண்டிய முஸ்லிம்களையும் கடந்த பொதுத்தேர்தல் சின்னாபின்னமாக்கியிருக்கிறது. அவர்களது ஏகோபித்த தலைமைத்துவம் சிதறடிக்கப்பட்டு, பெரும்பான்மைக் கட்சிகளின் பின்னாலும், தனித்தும் அதன் பிரதிநிதித்துவம் துண்டு துண்டாகி பிளவுபட்டுப் போயிருக்கின்றது.

இந்தப் பின்னணியில்தான் சமாதான நடவடிக்கைகளின் பின்புலப்பலம் வீழ்ச்சி கண்டுவருவதை நோக்க வேண்டியிருக்கின்றது.

"யுத்தநிறுத்தம் என்பது நிரந்தர அமைதி அல்ல, போராயுதங்களுக்கு இடைக்காலமாகக் கொடுக்கப்பட்ட வெறும் ஓய்வு மட்டுமே" என்பதை முன்னர் குறிப்பிட்டு வந்த ஜனாதிபதி, அந்த இடைக்காலத்திலும் தலை தெரியாத - முகம் வெளிப்படாத - பதிலாள்களை வைத்துக்கொண்டு, அவர்களை ஏவிவிட்டு, புலிகளுக்கு எதிராக ஒரு மறைமுக யுத்தத்தை - இருண்ட போரை - முன்னெடுக்கின்றார் என்பது புலிகளின் குற்றச்சாட்டு.


இது பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டிவளர்க்க வேண்டிய அடிப்படைத் தேவையை சிதறடிக்கும் ஒரு செயற்பாடேயன்றி வேறல்ல.

அமைதி முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமாகப் பங்களிப்பதன் மூலம் அந்த நடவடிக்கைகளுக்குப் பலமான அத்திவாரத்தைப் போட ஜனாதிபதியும் அவரது அரசும் விரும்பினால் முதலில் கிழக்கில் இந்தக் கண்ணுக்குப் புலப்படாத இருண்ட யுத்தத்தை முன்னெடுப்பதை நிறுத்த வேண்டும்; புரிந்துணர்வு ஒப்பந்த வாசகங்களுக்கும், கடந்த காலங்களில் அதைக் கைக்கொண்ட முறைக்கும் அமைய, கருணா விவகாரத்தைக் கையாள முன்வர வேண்டும்.

இந்த இரண்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் மட்டுமே சமாதான முயற்சிகள் உடைந்து போவதைத் தடுத்து நிறுத்த முடியும்; அவற்றை ஆக்கபூர்வமான திசையில் முன்நகர்த்த முடியும்; அமைதி வழியல் நிரந்தரத் தீர்வு எட்டுவதை சாதகமாக்க முடியும்.

அதைப் பொறுப்புள்ளவர் உணர்ந்துகொள்வது அவசியம்.

# நன்றிக்கு மட்டுமல்ல நட்புக்கும்.....!



படத்தில் நீங்கள் காண்பது கிளிநொச்சி, புதுமுறிப்புப் பகுதியில வசிக்கும் மணியம் என்ற சைக்கிள் திருத்தும் தொழிலாளி ஒருவரது வளர்ப்பு விலங்குகள். இவை மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய நண்பர்கள். தனது நண்பர்களான நாயையும் பூனையையும் மிகவும் பரிவுடன் அணைத்து மகிழ்கிறார் குரங்கார். நன்றிக்கு மட்டுமல்ல, நட்புக்கும் நாய்தான் மனிதர்களைவிட உயர்ந்தது என்பதைக் காட்டுகின்றனவா இந்தப் படங்கள்....! இந்த அபூர்வக் காட்சிகளை ஏராளமான மக்கள் பார்த்து வியந்து செல்கின்றனர்.

*(படங்கள்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# கரவெட்டி குடிதண்ணீர்த் திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்குக!

**சிவநேசன் எம்.பி.அரச அதிபருக்குக் கடிதம்**

தெல்லிப்பழை,ஜூலை3

கரவெட்டி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.சிவநேசன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இது விடயமாக அவர் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நன்னீர் வளம் குன்றிய கரவெட்டிப் பிரதேச மக்களின் நலன கருதி 1963ஆம் ஆண்டு இங்கு வசித்த 4ஆயிரத்து 200 குடும்பங்களை மையமாக வைத்தே இந்த விநியோகத்திட்டம் ஆரம்பிகப்பட்டது.

தற்போது இப்பகுதியில் சுமார் 15ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றன. சுமார் 50ஆயிரம் பேர் நாள்தோறும் இந்த நன்னர் விநியோகத்திட்டம் மூலம் நன்மை பெறுகின்றனர்

இந்நிலையில் மேற்படி தண்ணீர் விநியோகத்திட்டத்தின் செயற்பாடு இப்பகுதி மக்களுக்கு போதுமானதாக இல்லை. மேலும் தினமும் சுமார் ஒரு சில மணித்தியாலங்களே இங்கு நீர் விநியோகமும் நடைபெறுகிறது.

எனவே, நன்னீர் வளம் குன்றிய இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் குடிதண்ணீருக்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இந்தக் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்று அதில் உள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் தேசிய நீர்விநியோக வடிகாலமைப்பின் பிரதிப் பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. (எ-4-150)

# கரும்புலிகள் நாள் சிறுகதை கவிதைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை3

கரும்புலிகள் நாளை ஒட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்திய கவிதை, சிறுகதைப் போட்டிகளின் முடிவுகள் நேற்று வெளியாகின.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு பேரவையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

**கவிதை**

முதலாம் இடம்: செல்வி செல்வநாதன் செல்வரஞ்சினி (யாழ். மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), 2 ஆம் இடம்: செல்வி கந்தசாமி ஜீவிதா (சந்திரபுர ஸ்கந்தா), 3 ஆம் இடம்: செல்வி கி.டிலோஜனா (நெடுந்தீவு ம.வி.)

கவிதைப் போட்டியில் பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்:-

செல்வி சாமிநாதன் மேரிமடோனா (நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி), தி.கமலேஸ்வரன் (முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்),

செல்வி .பவித்திரா சுப்பிரமணிய ஐயர் (யாழ். செங்குந்தா இந்து), நடராசா கண்ணதாஸ் (வேலணை சைவப் பிரகாச), செல்வி தி.தர்மினி (வட்டக்கச்சி ம.வி.),

செல்வி ம.வானதி (சோமஸ்கந்தா), செல்வி பிரின்சியா ஜெயசந்திரமூர்த்தி(கிளிநொச்சி ம.வி.), செல்வி ம.கரோலினி(நெடுந்தீவு ம.வி.),

ஜோசப்பின் சியாரனி லூக்காஸ் (யாழ்.புனித சாள்ஸ் ம.வி.), சிவநேசன் திருக்குமார் (ஹாட்லி),

சிறப்புப் பரிசு:- க.றொபேர்ட் (களுத்துறை சிறைச்சாலை),

**சிறுகதை**

முதலாம் இடம்: நீதிவேந்தன் (முள்ளியவளை), இரண்டாம் இடம்: கா.சுயந்தன் (கிளிநொச்சி), 3 ஆம் இடம்: சி.செம்பருதி (உருத்திரபுரம்),

சிறுகதைப் போட்டியில் பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்:-ஜே.எட். ஜெனிற்றா (இளவாலை), வி.தேவபானு (உடையார்கட்டு), திருமதி மு.மாலாதேவி (அளவெட்டி), த.பிரபாளினி (மட்டுவில்), ஏழுமலை மூவேந்தன் (மல்லாவி), சி.சோ.பதந்தன் (தாவடி), நடராசா வினோதரன் (மிருசுவில்), செல்வி தர்மினி பத்மநாதன் (யாழ்ப்பாணம்), தேவி பரமலிங்கம் (வண்ணார்பண்ணை), சிவகுமார் சிவரூபன் (யாழ். சந்திரபுர ஸ்கந்தா). (எ-3)

# நிவாரணம் வழங்கப்படாததால் நெடுந்தீவு மக்கள் விசனம்

நெடுந்தீவு,ஜூலை3

நெடுந்தீவு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு பெப்ரவரி மாதத்துக்கான உலர்உணவு நிவாரணம் இது வரையில் வழங்கப்படவில்லை.

இதனால் இப்பகுதியில் மீளக்குடியமர்ந்த பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் நிவாரணப் பொருள்களை வழங்குவதற்குரிய அனுமதிப் பத்திரங்கள் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட போதிலும் இதுவரையில் நிவாரண விநியோகம் ஆரம்பிக்கவில்லை என்றும் - கூறப்பட்டது.

நிவாரணப் பொருள்கள் வழங்கப்படாமையினால் தொழில் வசதிகளற்ற இப்பகுதிக் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்திலும், இந்தியாவிலும் தங்கியிருந்த குடும்பங்களே தற்போது தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-10-ரி)

### நாளை

ஆனி 20
ஞாயிற்றுக்கிழமை
(04.07.2004)
திதி : துதியை
பகல் 12.50 வரை.
நட்சத்திரம்:உத்தராடம்
பகல் 8.29 வரை.
சுபநேரம்: 8.57- 10.27
ராகுகாலம்: 4.27 - 5.57
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு செயலில் உறுதியாக இருப்பதே வெற்றியின் இரகசியம்

# பல்லாயிரம் அடியார்கள் சூழ தேரில் பவனி வந்த நயினை அம்பாள்

யாழ்ப்பாணம்,ஜூலை3

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் பக்த்தி உணர்வு பொங்கிப்பிரவகிக்க வெகுசிறப்பாக நடைபெற்றது.

பல்வேறு இடங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

அங்கப்பிரதிஷ்டை, கற்பூரச்சட்டி, தூக்குக்காவடி, ஆட்டக் காவடி, பாற்காவடி என்பவற்றின் மூலமாக அடியவர்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றிக் கொண்டனர்.

அன்றைய தினம் குறிகாட்டுவானில் நீண்ட வரிசையில் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அம்பிகையின் இரதோற்சவக் காட்சியினைக் காண்பதற்காக ஏராளமான மக்கள் காத்திருந்தனர். அனேகமானோர் அம்பாளின் அருட்கோலததை எப்படியாவது தரிசித்துவிட வேண்டும் என்பதற்காக முதல்நாளே ஆலயத்துக்குச் சென்று தங்கியிருந்தனர்.

இதனையொட்டி குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து குறிகாட்டுவானுக்கு விசேட பஸ்சேவைகள் நடத்தப்பட்டன.

சாரணர் படையினர், முதலுதவிச் சிகிச்சைப் பிரிவினர், மகளிர் நலன்புரிச் சங்கத்தினர் என பல சமூகத்தொண்டு நிறுவனங்கள் தமது சேவையினை சிறப்புடன் விஸ்தரித்திருந்தன.

ஆலய வளாகத்தினுள் அமைந்துள்ள அமுத சுரபி அன்னதான சபையினரால் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப் பட்டது. இதேவேளை நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்ற தீர்த்தோற்சவத்திலும் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் பங்கேற்றனர். (4-13)

# 'நவோதயா' திட்டத்தின் கீழ் பாடசாலைகள் புனரமைப்பு

கொழும்பு,ஜூலை3

கல்வியமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'நவோதயா' கிராமியப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருபாடசாலைகள் வீதம் தெரிவுசெய்யப்பட்டு அப்பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

கற்பித்தல் செயற்பாட்டுக்காகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இந்தப் பாடசாலைகளில் நியமனஞ் செய்யப்படவுள்ளனர்.

இதற்காக அரசு வரவு - செலவுத் திட்டத்திலிருந்து ஒருதொகை நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. (-4-ரி)

சிவமயம்

# பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆனித்திங்கள் 19ஆம் நாள் இன்று (03-07-2004) சனிக்கிழமை காலை 8.10 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள உத்தராட நட்சத்திரமும் கர்க்கடக லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி



## தூரட்ஷாஜினி



அவர்களுக்கு

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் துணைகொண்டு பூப்புப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

வட்டார இல.07,
நயினாதீவு.

திரு.திருமதி
ஓங்காரலிங்கம் குடும்பத்தினர்.

(C/35895)(42-13-34)

---


# யாழ்ப்பாணத்திற்கு அதிக லைன்கள்

எங்கள் விரிவாக்க நடவடிக்கைகளின் பயனாக இப்பொழுது மானிப்பாயில் மேலும் அதிக லைன்களைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதிகமான தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளதால் உங்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கக்கூடியதாக எமது ஆற்றல் வளங்கள் அதிகரித்துள்ளன. எனவே, தாமதிக்காதீர்கள். இன்றே சண்டெல்லுடன் இணைந்து அதிநவீன தொலைத்தொடர்புச் சேவையின் நன்மையைப் பெறுங்கள்.

# 7 தினங்களுக்குள் இணைப்பு

## ஐ.டி.டி. சகிதம் சண்டெல் தொலைபேசி

# ரூ. 24,900/=

Q&E Advertising

**Suntel**
*Your telecom partner for life*

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:
இல.31, பிள்ளையார் இன் கட்டடம்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 4590000-1 .·. பெக்ஸ்: 4590003


---

### கூரை ஓடுகள் விற்பனைக்கு

எம்மிடம் புதிய கூரை ஓடுகள் விற்பனைக்கு உண்டு.
விலை16.50

தொடர்பு:
**சிவம் விறகு காலை**
336 (150), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (33736)

---

### கார் விற்பனைக்கு

13 தொடரிலக்கம் கொண்ட Lancer கார் (GLX Box Model) முற்றிலும் குளிரூட்டப்பட்டது) உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 021 226 3575**
(சி-35978)

---

### கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் நடத்தும்
### கமலநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணச் சுற்றுப்போட்டி

அமரர் **ஆறுமுகம் கமலநாதன்**
(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)



அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் அனுசரணையுடன் எம்மால் நடத்தப்படும் 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி.

பிரதம விருந்தினர்:
**திரு.T.கிருபாகரமூர்த்தி**
(அமைப்பாளர், கே.சி.சி.சி.கிளை, கவிஸ்)

இடம்: **கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்**

காலம்: *இன்று (03.07.2004) சனி. காலை 8.30 மணி தொடக்கம்*

✪ *அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்* ✪

*கொக்குவில்.* (33730) (24-34-13-42)

**- சுற்றுப்போட்டிக் குழு -**

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
11
05
1918



உதிர்வு
15
06
2003

## அமரர் சிவக்கொழுந்து தம்பு

திதி: 03.07.2004 சனிக்கிழமை

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்த அமரர் ஆகிவிட்ட எங்கள் தெய்வமே!**
**நீங்கள் எம்மை விட்டுச் சென்று ஆண்டொன்று போனாலும் ~ தினமும் உங்கள் நினைவை மறக்காது இவ்வுலகில் வாழ்கின்றோம்.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அரசடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.*

உங்கள் நினைவுடன்:
**- குடும்பத்தினர்.**

(33740)(34-13-42)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கார்த்திகேசு சௌந்தரம்மா

(நெடுந்தீவு மேற்கு)

நெடுந்தீவு மேற்கு, தம்பி உடையார் தோட்டம் திருமதி கார்த்திகேசு சௌந்தரம்மா அவர்கள் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் கோபால பிள்ளை (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), காலஞ்சென்றவர்களான குணமணி இராமநாதன் (தபால் அதிபர்) மற்றும் சிவஞானம் (கிராம உத்தியோகத்தர், வேலணை) ஆகியோரின் அருமைத் தாயாரும் கமலா தேவி, காங்கேசு (முன்னாள் கிளைமுகாமையாளர், பல நோ.கூ.நெடுந்தீவு), நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அரிகரன் (கனடா), அரபிந், அர்ச்சுனா, அஞ்சனா, அர்சிகா தர்மரத்தினம் (லண்டன்), விஜயலதா (லண்டன்), குணரட்ணம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2004) சனிக்கிழமை மாலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுந்தீவு மேற்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பி உடையார் தோட்டம்,*
*நெடுந்தீவு - 01.*

தகவல்:
**க.காங்கேசு (மருமகன்).**
(33734)(34-13-42)

---

## சடாசிவம் சின்னத்தம்பி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், இல.198, குருசோ வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சடாசிவம் சின்னத்தம்பி அவர்கள் (30-06-2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மலர் அவர்களின் அன்புக் கணவரும், ஜெபதாஸ் (சின்னண்ணை), ஆனந்தராசா (ராசு), சந்திரநாயகம் (ரிங்கர் சந்திரன்), செல்வநாயகம் (மோகன் - ஜேர்மனி), பத்மா (ஜேர்மனி), நகுலேஸ் (கனடா), குன்ராஜா (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோதி, பிறேமா, லலிதா, லூசியன் பொனிபொஸ், ஜெயந்தா, சாள்ஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03-07-2004) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கததுக்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.198,*
*குருசோ வீதி, யாழ்ப்பாணம்.*
**T.P: 077 6157690**

(33729)(42-34-13)

தகவல்:
**- குடும்பத்தினர்.**

# ஈராக்கில் சிறைக் கைதிகள் மரணம்; அடுத்த விசாரணை ஆரம்பமாகியது

வாஷிங்ரன்,ஜூலை3

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இரு சிறைக்கைதிகள் இறந்தது குறித்து மறுவிசாரணை ஆரம்பமாகியுள்ளது. அமெரிக்க இராணுவ குற்ற விசாரணை அதிகாரிகள் இந்த விசாரணையை நடத்துகின்றனர்.

ஈராக் போரின்போது கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களை அமெரிக்க இராணுவம் சிறைகளில் அடைத்தது. சிறையில் நடந்த கொடுமையின் காரணமாக பல ஈராக்கியர்கள் இறந்ததாகத் தகவல்கள் வெளியாகின.

அமெரிக்க இராணுவ வீரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த சிறைக்கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவம் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது இது தொடர்பாக அமெரிக்க இராணுவம் - முதல் கட்டமாக நடத்திய விசாரணையில் இறந்தவர்கள் அனைவரும் இயற்கையாகவே மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இதுகுறித்து மறுவிசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது. காவலில் இருந்த இரு சிறைக்கைதிகள் இறந்தது தொடர்பாக மறுவிசாரணை நடத்த அமெரிக்க இராணுவமும் முன்வந்துள்ளது. இராணுவத்தின் குற்ற விசாரணை அதிகாரிகள் இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

கைதிகள் இயற்கையாக மரணமடைந்தார்களா அல்லது கொலை செய்யப்பட்டார்களா என்பது குறித்து இந்த அதிகாரிகள் முழுமையாக விசாரணை நடத்துவார்கள் என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (8)

## தென்கிழக்கு ஆசிய நாடுகள் அமைப்பில் இணைந்துகொள்ளும் பாகிஸ்தான

ஜகார்த்தா,ஜூலை3

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (ஆசியான்) பிராந்திய அமைப்பின் உறுப்பு நாடாக, பாகிஸ்தான் முறைப்படி வெள்ளிக்கிழமை சேர்க்கப்படுகிறது.

காஷ்மீர்ப் பிரச்சினையையும் இந்தியா, பாகிஸ்தான் இடையிலான இதர இருதரப்புப் பிரச்சினைகளையும் ஆசியான் பிராந்திய அமைப்பில் எழுப்பமாட்டோம் என்று பாகிஸ்தான் உறுதிமொழி அளித்துள்ளது. அதையடுத்து, அந்த அமைப்பில் அனுமதிக்கக் கோரி பாகிஸ்தான் அளித்திருந்த விண்ணப்பத்தை இந்தியா அங்கீகரித்தது.

அதைத் தொடர்ந்து ஏ.ஆர்.எப். எனப்படும் ஆசியான் பிராந்திய அமைப்பில் பாகிஸ்தானை உறுப்பு நாடாக அனுமதிக்க அந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்தது. (8)

## சிங்கப்பூர் இராணுவத்துக்கு இந்தியாவில் விரைவில் பயிற்சி

சிங்கப்பூர்,ஜூலை3

சிங்கப்பூர் விமானப்படை மற்றும் இராணுவ வீரர்கள் இந்தியாவில் பயிற்சி பெற உள்ளனர்.

இது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கனவே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன்படி விமானப்படை மற்றும் இராணுவப் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் இந்தியாவில் பயிற்சி பெறுவார்கள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் தேல் ஷீ ஹீன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

விமானப்படை வீரர்கள் இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் பயிற்சி பெறுவார்கள். இராணுவவீரர்கள் அடுத்த ஆண்டில் பயிற்சி பெறுவார்கள்.

இந்தியாவில் சிங்கப்பூர் நடத்தும் பயிற்சி முகாம்களில் இந்த வீரர்கள் பயிற்சி பெறுவார்கள்.

பிற இராணுவப் படையுடன் இணைந்து பயிற்சி பெறுவதால் புதிய பரிமாணம் கிடைக்கும். அதற்கு இந்தப் பயிற்சி நல்ல வாய்ப்புத் தரும் என்றார் - ஹீன்.

இந்தியாவுக்கும் சிங்கப்பூருக்கும் இடையே, கடந்த ஆண்டில் பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டுள்ளது. (8)



பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள மிருகக்காட்சிச் சாலையொன்றில் சுற்றுலாப் பயணி ஒருவர் கொடுத்த ஐஸ்கிறீமை தன்னை மறந்த நிலையில் சுவைத்துக் கொண்டிருக்கும் 'டிச்சினி' என்ற குரங்கைப் படத்தில் காண்கிறீர்கள்.

## ரூ.6 கோடி பெறுமதியான நகைகளை டுபாயில் திருடிச் சென்றவர் ரோமில் மாட்டிக் கொண்டார்

ரோம்,ஜூலை3

டுபாயில் உள்ள நகைக்கடையில் ரூ.6 கோடி மதிப்புள்ள வைரம், மரகதக்கல் பதித்த நகைகளைத் திருடியவர், விமானத்தில் இத்தாலிக்குத் தப்பிச் சென்றார். ஆனால், ரோம் நகர விமான நிலையத்தில் தயாராக இருந்த பொலீஸார் அவரை மடக்கிப் பிடித்துவிட்டனர்.

டுபாயில் உள்ள நகைக்கடைக்கு நகை வாங்குவது போல 33வயது வாலிபர் சென்றார். அங்கிருந்த ஊழியர்கள் கண்ணிலும் கண் காணிப்புக் கமராக்களிலும் சிக்காமல் ஏராளமான நகைகளைத் திருடினார்.

அவர் திருடிய வைரக்கற்கள் பதித்த கைக்கடிகாரங்கள், வைர நெக்லஸ், வைரம், மரகதக்கல், கெம்புக்கல், புஷ்பராகம் போன்ற விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட கம்மல்கள் உள்ளிட்டவற்றின் மதிப்பு ஆறரைக்கோடி ரூபா. பின் அங்கிருந்து நழுவி விமான நிலையம் சென்று இத்தாலிக்கு விமானம் ஏறி விட்டார்.

அப்போதுதான் நகைக்கடை ஊழியர்கள் வைர நகைகள் களவாடப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தனர். அவர்கள் அந்த நபரின் அடையாளத்தைக் கூறி பொலீஸில் புகார் செய்தனர். பொலீஸார் பிடிக்குமுன்னர் இத்தாலிக்கு விமானத்தில் பறந்துவிட்டார் அவர். உடனே இத்தாலி பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

ரோம் நகரில் விமான நிலையத்தில் தயாராக இருந்த பொலீஸார் அந்த வாலிபரை மடக்கிப் பிடித்தனர். விசாரணையில் அவர் குரோஷியா நாட்டைச் சேர்ந்த தாம்யனோவிக் கோரன் (33) என்பது தெரியவந்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கும். (8)

## திருமாவளவன் உள்ளிட்ட 25பேர் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் கைது



நேற்று முன்தினம் தேரோட்டம் நடந்த சிவகங்கை மாவட்டம் கண்டதேவி கிராமத்திற்கு தமது தடையை மீறிப் புறப்பட்டுச் சென்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்புத்தலைவர் திருமாவளவன் உட்பட 25 பேரைப் பொலீஸார் நேற்று முன்தினம் மதுரையில் கைது செய்தனர்.

சிவகங்கை மாவட்டம் கண்டதேவியில் நடந்த தேரோட்டத்தில் கலந்து கொள்ள நேற்று அதிகாலை திருமாவளவன் சென்றார். அப்போது வெளிமாவட்டத்தினர் தேரோட்டம் நடக்கும் இடத்திற்குள் வர அனுமதியில்லையென பொலீஸார் திருப்பி அனுப்பினர். சிவகங்கை மாவட்டக் கலெக்டர் ஆனந்த் பட்டீல், தென்மண்டல ஐ.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் திருமாவளவனிடம் பேச்சுவார்த்தை நடத்தி அனுப்பி வைத்தனர். மதுரை வந்த திருமாவளவன் கலெக்டர் அலுவலக பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள ஹோட்டலில் தங்கினார். அவர் எப்போது வேண்டுமானாலும் கண்டதேவிக்கு கிளம்பலாம் என்பதால் இந்தக் ஹோட்டலில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

பிற்பகல் 3.45மணிக்கு திருமாவளவன் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து தனது ஆதரவாளர்களுடன் காரில் கிளம்பினார். பொலீஸாரும் வான் மற்றும் ஜீப்களில் அவரைப் பின் தொடர்ந்தனர். சிவகங்கை வீதியில் அண்ணா நகர் சந்தியில் பொலீஸார் பெருமளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அந்த இடத்தில் திருமாவளவன் கார் வந்ததும் அதைப் பொலீஸார் வழிமறித்து நிறுத்தினர். திருமாவளவன், மாவட்ட அமைப்பாளர் கலைவாணன், இணைப் பொதுச் செயலாளர் ஆற்றல்அரசு, துணைப் பொதுச் செயலாளர் எல்லாளன், மகளிர் அணிச செயலாளர் பாண்டியம்மாள், தலைமை நிலையச் செயலாளர் பாவரசு உட்பட 25பேரைப் பொலீஸார் கைது செய்தனர். (8)

## நான்தான் ஈராக் ஜனாதிபதி! புஷ் உண்மையான கிரிமினல்!!

### நீதிமன்றில் சதாம் ஆக்ரோஷ முழக்கம்

"நான்தான் ஈராக் ஜனாதிபதி" என்று நேற்றுமுன்தினம் ஈராக்கிய நீதிமன்றத்தில் அடித்துக்கூறினார் சதாம் ஹுசைன்.

ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கப்படையினரால் பதவி கவிழ்க்கப்பட்டு பின்னர் மறைவிடத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், புதிதாக உருவாக்கப்பட்ட ஈராக்கின் இடைக்கால அரசிடம் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டார். அந்த அரசின் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் நிறுத்தப்பட்டார்.

சதாம் ஹுசைன் அடுத்தவருடம் விசாரணைக்கு உட்படுத்தப்படவிருக்கிறார். அதற்கு முன்னர் அவர்மீது சுமத்தப்படவுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அவருக்குக் கூறுவதற்காக பக்தாத்துக்கு வெளியேயுள்ள ஓரிடத்தில் நீதிபதி சலாம் சலாபி முன் அவர் நிறுத்தப்பட்டார்.

1990 ஆம் ஆண்டு குவைத் நாட்டை ஆக்கிரமிக்க அவர் உத்தரவிட்டார் என்றும் அது பாரிய குற்றம் என்றும் கூறப்பட்டபோது அதனை எதிர்த்து சவால்விடும் தொனியில் சதாம் ஹுசைன் மறுத்துப் பேசினார்.

குவைத் நாட்டவரை 'நாய்கள்' என்றும் அவர் விவரித்தார். ஈராக் மக்களின் நன்மைக்காகவே, தாம் அந்நாட்டின்மீது படையெடுத்ததாக அவர் கூறினார்.

அவருடைய வார்த்தைப் பிரயோகங்களுக்காக சதாமை நீதிபதி கண்டித்தபோது "இங்கு அரங்கேறுவது எல்லாம் நாடகம். உண்மையான கிரிமினல் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தான்" என்று அடித்துக்கூறினார் சதாம்.

அமெரிக்க இராணுவத்தளம் ஒன்றில் நடை



பெற்ற விசாரணைகளை அடுத்து அதுபற்றிய தொலைக்காட்சிப்படம் வெளியானது.

அதில் சதாம் நீதிமன்றத்தில் ஆக்ரோஷமாகப் பதிலளிக்கும் காட்சிகள் இடம்பெற்றன. ஆனால் அவரின் குரல் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக செய்தியாளர்களின் குரல் ஒலிபரப்பானது.

சதாமின் வார்த்தைகள் அப்படியே ஒலிபரப்பானால் அவரின் கருத்து இஸ்லாமிய உலகில் பிரசாரப்படுத்தப்பட்டு, அவருக்கு ஆதரவான எழுச்சி வெளிப்பட்டுவிடும் என்ற அச்சத்திலேயே அவரது குரல் கத்திரிக்கப்பட்டிருப்பதாக விபரமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒழுங்காக வெட்டப்பட்ட நரைத்த தாடியுடனும், வளர்ந்த கண் புருவங்களுடனும் மெலிந்து காணப்பட்டார் சதாம் ஹுசைன்.

நீதிபதியை நோக்கிக் கடுமையாகவும் கை விரல்களைக் குத்துவது போலவும் காற்றில் அசைத்தும் அவர் பேசினார்.

ஈரானுடனான போர் குர்திஷ் இன மக்கள் மீது 1988இல் ஹலப்ஜாவில் நடத்தப்பட்ட இரசாயன ஆயுதத்தாக்குதல், வளைகுடாப் போரை அடுத்து எழுந்த கிளர்ச்சியை ஒடுக்கியமை, ஷீஆ மதத் தலைவர்களைக் கொலை செய்தமை அவருக்கு எதிரான குற்றப்பட்டியலில் அடங்கியிருக்கின்றன.

சதாம் ஹுசைனின் அரசில் இடம்பெற்ற பதினொரு உயர் தலைவர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி தம்மை அடையாளப்படுத்துமாறு கேட்டபோது, "நான்தான் சதாம், ஈராக்கிய ஜனாதிபதி நான்" என்றும் அவர் கூறினார். முன்னாள் துணைப்பிரதமர் தாரிக் அஸிஸ், துணை ஜனாதிபதி தாஹா யாசின் ரம்ழான், பாதுகாப்பு அமைச்சர் சுல்தான் ஹாஷிம் அஹ்மத், ஜனாதிபதிச் செயலாளர் ஆபித் ஹமீட், ஜனாதிபதி ஆலோசகர் கெமிக்கல் அலி என்று அழைக்கப்படும் அலி ஹாஸின் அல் - மஜித், சதாமின் ஒன்றுவிட்ட சகோதரர் வத்பான் இப்ராஹிம் ஹஸன், உளவுத்துறை அமைச்சர் ஆகியோரும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். (8)

## நடனமாடும் சதாம் பொம்மை ஈராக்கில் அமோக விற்பனை

பக்தாத்,ஜூலை3

ஈராக்கின முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் நடனமாடும் பொம்மை அமோக விற்பனையாகின்றது.

ஈராக்கில் அதிபராக சதாம் ஹுசைன் இருந்தபோது மக்களை தன் விருப்பப்படி ஆட்டுவித்தார். இப்போது பொம்மை வடிவில் அவரை ஈராக் மக்கள் ஆட்டுவிக்கின்றனர். நடனமாடும் சதாம் பொம்மைக்கு தலைநகர் பக்தாத் மற்றும் பல இடங்களில் மவுசு அதிகரித்து உள்ளது. பற்றரியில் இயங்கும் ஒரு அடி உயரமான இந்தப் பொம்மையில் ஒரு பொத்தானை அழுத்தினால், பாப் இசையுடன் சதாம் ஹுசைன் இடுப்பை வளைத்து, நெளித்து, சுழற்றி ஆடுகிறார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சதாம் ஆட்சி வீழ்ந்த பிறகு இந்தப் பொம்மைகள் விற்பனைக்கு வரத்தொடங்கின. சீனத்தயாரிப்பான இந்தப் பொம்மைகளைத் துருக்கி வியாபாரி ஒருவர் ஈராக்கில் அறிமுகப்படுத்தினார். இதேபோல, ஒசாமா பின்லேடன், பிடல் காஸ்ட்ரோ, ஜோர்ஜ் புஷ் ஆகியோர் நடனமாடும் பொம்மைகளும் விற்பனையாகின்றன. (8)

# மாகாணசபைத் தேர்தல் முடிந்ததும் டீசல்,பெற்றோல் விலை உயரும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் ஆருடம்

மாவனல்ல,ஜூலை3

"நடைபெறவுள்ள மாகாணசபைத தேர்தலோடு பெற்றோல் - டீசல் என்பவற்றின் விலை அதிகரிக்கும் அதைத தொடர்ந்து ஏனைய பொருள்களின் விலைகளும் கிடுகிடு என உயரும்'' என ஆருடம் கூறியுள்ளார் எதிர்க்கட்சித தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கேகாலை நகரமண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணசபைக்குப் போட்டியிடும் ஐ.தே.முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவு வேண்டி நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையின்மையால் அரசு என்ன செய்வதென்றே புரியாமல் தவிக்கின்றது. சாகப் போகின்ற நிலையிலிருந்த மனிதனுக்கு கசப்பு மருந்துகளையேனும் கொடுத்து உயிர்வாழும் நிலைமைக்குக் கொண்டுவந்தது போல - அதலபாதாளத்திலிருந்த இந்த நாட்டை எமது ஐ.தே.முன்னணி அரசு காப்பாற்றியது. யுத்தத்தை நிறுத்தி சமாதானம் ஏற்பட அடித்தளமிட்டது.

எமது அரசை வஞ்சகமாகக் கலைத்து அங்கு பொய் வாக்குறுதிகளையெல்லாம் அளித்து, இந்த அரசு பதவிக்கு வந்தது. ஆனால், இப்போது நடப்பது என்ன? ஜே.வி.பியுடன் சேர்ந்து அவர்களின் தாளத்திற்கு ஆடும் நிலை ஜனாதிபதிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் ஏற்பட்டுள்ளது. நாள்கள் போகப்போக இந்த அரசின் உண்மையான சொரூபம் தெரியவரும். அப்போதுதான் நாம் ஏமாந்துவிட்டோம் என்று மக்கள் புரிந்து கொள்வார்கள் - என்றார் அவர். (க)

## சிரமதானப்பணி

காரைநகர்,ஜூலை3

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு காரைநகர் அரசினர் வைத்தியசாலை சுற்றாடல் இன்று சனிக்கிழமை சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

காரைநகர் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் இணைந்து இந்த சிரமதானப்பணியில் ஈடுபட உள்ளனர். (4-73)

## முன்பள்ளிக் கண்காட்சி

வலி.தென்மேற்கு,ஜூலை3

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் சண்டிலிப்பாய்ப் பிரதேசப் பிரிவு நடத்தும் முன்பள்ளிக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 5 மணிவரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, சில்லாலை ஆகிய பகுதிகளின் குடும்ப முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து இக்கண்காட்சியை நடத்துகின்றனர்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச தலைவர் ஜோ.ஜோன்சிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாள் சி.சிவநேசன், பொதுச்சேவைப் பங்காளர் எஸ்.ஜே. செல்வராசா, வலி.தென்மேற்குப் பிரிவு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா, வலி.மேற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்வார்கள். (-4-135)

## குளங்கள் புனரமைப்பு

வலி.தென்மேற்கு,ஜூலை3

கீரிமலை கமநல கேந்திர நிலையப் பிரிவிலுள்ள தெல்லிப்பழை, துர்க்காபுரம் பெரியதம்பிரான்குளம், இளவாலை வட.மேற்கு மட்டிவளைக் குளம் ஆகிய இரு குளங்களும் 'கெயர்' நிறுவனத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதன் புனரமைப்பு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் அவ்வப் பகுதி விவசாயிகள் சம்மேளனங்கள் செய்துமுடிக்கவுள்ளன. விரைவில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாகக் கீரிமலை கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (-4-135)

## தென்மராட்சி வலய ஆங்கிலதினப் போட்டிகள்

தென்மராட்சி,ஜூலை3

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் நான்கு தினங்கள் நடைபெறவுள்ளன.

6ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், 7ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், 8ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், 9ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

# விவசாய, மீன்பிடிச் செயற்பாடுகள்; ஜப்பானியக் குழு யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்.மாவட்டத்தின் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக ஜப்பான் தூதரக முதலாவது செயலாளர் தலைமையிலான குழுவொன்று எதிர்வரும் 7ஆம திகதி யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

ஜப்பானியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் கோசி இவாசிடா, இரண்டாவது செயலாளர் மசாயுகி யசுடா, ஜப்பானிய தேசியக் கூட்டுத்தாபன முகவர் அமைப்புக்கான வதிவிடப் பிரதிநிதி கோ கோடோ மற்றும வதிவிட சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் சபாபதி முடியான்செலாகே புஞ்சிபண்டா ஆகிய நால்வர் அடங்கிய குழுவினரே இவ்வாறு வருகைதரவுள்ளனர்.

எதிர்வரும் 7ஆம் திகதி வருகை தரும் இக்குழுவினர், மறுநாள் யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனையும் கடற்றொழில் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்துக் குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடுவர்.

தொடர்ந்து கமநல அபிவிருத்தித் திணைக்களம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சித் திணைக்களம், புத்தூர் கமநல சேவைகள் நிலையம் மற்றும் கைதடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கமநலசேவைகள் நிலையங்களுக்கு இவர்கள் நேரில் விஜயம் செய்யவுள்ளனர். (எ-5)

# கணித ஆசானுக்குக் கண்ணீர்க் காணிக்கை



யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் கணித பேராசானுமாகிய

**கலாநிதி**

**மகாதேவா ஸ்கந்தராஜா**

அவர்கள் (30.06.2004) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அவரின் திடீர் மறைவு எம்மை ஆழ்ந்த துயரத்துக்குள்ளாக்கியுள்ளது. அமரருக்கு எமது கண்ணீக காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விஞ்ஞான பீட 4ஆம் வருட மாணவர்கள்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(33702)(43-21-19)

# மரண அறிவித்தல்

**கலாநிதி ம.ஸ்கந்தராஜா** M.Sc., Phd (Alberta)

(சிரேஷ்ட விரிவுரையாளர், கணித புள்ளிவிவரவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



காலஞ்சென்ற மகாதேவா - கனகபூசனி தம்பதியின் அருமை புதல்வராகிய ஸ்கந்தராஜா [M.Sc, Phd (Alberta) சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதபுள்ளிவிவரவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்] 30.06.2004 அன்று காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2004) சனிக்கிழமை சுதுமலை வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில காலை .8.00 மணிக்கு நடைபெற்று, பின்னர் பூதவுடல் காலை 10.00 மணியளவில் யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தாவடி இந்து மயானத்தில் இறுதிக கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


*கேணிக்கரை ஒழுங்கை,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய.*

தகவல்:
திருமதி ந.கமலவதனி (சகோதரி).

(33706)(13-16-36)


**இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**

*ஸ்ரீ சோட்டாநிக்கரை. பகவதி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன் மீண்டும்*



**P.T.R., மணிசாமி இரட்டையர்கள்**

யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா,? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

**ஸ்ரீ பாலாஜி விடுதி,**
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (கன்னாதிட்டிச் சந்தி அருகில்),
தொலை.பே. 222-2341
(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை). (33662) (26-21-19)



**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai**

# VACANCY

- **Instructor to conduct Trade Course in Carpentry needed**

Apply with Bio - Data before 9th July 2004

**Director,**
**Jaffna College Institute of Technology,**
**Vaddukoddai.**

★ Short listed candidates will be called for an interview.

Tel.Phone: 0602213139 Email: jcit@sltnet.lk

(C/35948)(40)


# அழைப்புக் கட்டளை

[இல. 16 - பிரிவு 55(1)]

மல்லாகம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

**சரவணமுத்து சுப்பிரமணியம்,**
**கைம்பெண் ஈஸ்வரி,**
**ஏழாலை வடக்கு, ஏழாலை.**

வழ.இல.காணி/240/04

எதிர் — வழக்காளி

**மனுவேல் றெஜி மரியதாஸும்,**
**பெண் றெஜினோல்ட் அம்மாவும்**
**அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்.**
**தற்போது வெளிநாட்டில்**
**விலாசம் தெரியவில்லை.**

எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி தங்களுக்கு எதிராக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி.

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் நாளன்று அல்லது அதன்முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவில் தேவைப் படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறுகட்சிக் காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**ம.செல்வரத்தினம்**
**பதிவாளர் நீதிமன்றக் கட்டளைப்படி**
**மாவட்ட / நீதிவான் நீதிமன்றம்,**
**பிரதி பிஸ்கால்/சமாதான நீதிவான், மல்லாகம்.**

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்து தவுமாறு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறு 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

(33723)(24-21-19)

**கையொப்பம்: பதிவாளர்**
**2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் நாளாகிய இன்று**


# Global Info

**NETWORK CONSULTANT & TRAINER**

Microsoft நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றதும், கொழும்பில் பல அரச, தனியார் நிறுவனங்களைக் கணனி வலைப்பின்னல் அமைப்பில் (Computer Network) ஈடுபடுத்தி, அந் நிறுவனங்களைக் கணனி வலைப்பின்னல் அமைப்பில் தொடர்ந்து பராமரித்துவரும் எமது நிறுவனமானது யாழ்ப்பாணத்திலும் தனது செயற்பாட்டினை விஸ்தரிக்கவுள்ளது. எனவே, மேற்படி எமது நிறுவனமானது பின்வரும் செயற்றிட்டங்களை யாழ்ப்பாணத்திலும் அறிமுகப் படுத்தியுள்ளது.

**எமது சேவைகளாக:**

அரச நிறுவனங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்களுக்கான கணனி வலைப்பின்னல் (Computer Network) அமைப்பினை உருவாக்குதலும் அவற்றைப் பராமரித்தலும், கணனி வலைப்பின்னல் பயிற்சிகளை வழங்குதல், கணனிகளை விற்பனை செய்தல், கணனிகளைத் திருத்தம் செய்தலும் அவற்றைப் பராமரித்தலும், இணையத்தளங்களை வடிவமைத்தல், கணனி மென்பொருள்களை வடிவமைத்தல் போன்ற பல சேவைகளை எமது நிறுவனமானது நடைமுறைப்படுத்தவுள்ளது.

எனவே எமது இச்செயற்பாட்டில் முதல் இணையும் அனைத்து அரச மற்றும் தனியார், Internet Browsing Center (net cafe) நிறுவனங்களுக்கும் எமது நிறுவனமானது பல்வேறு இலவசசேவைகளையும் வழங்கவுள்ளது. எனவே, எமது இச்செயற்பாட்டில் இணையவிரும்பும் நிறுவனங்கள் கீழுள்ள எமது நிறுவனத் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொள்வதன் மூலம் மேலதிக விவரங்களைப் பெறமுடியும்.

**- நிர்வாகி.**

Head Office:-
**82,1/1, Hospital Road,**
**Dehiwala,**
**Sri Lanka.**

Branch:-
**375, Navalar Road,**
**Jaffna,**
**Sri Lanka.**

T.P: 0777-778125/0777-110862
Fax: 0115 517557

E-Mail-info@GINTC.com
WWW.GINCT.COM

(33719)(42-21-19)

# புலிகள் அமைப்பு ஓர் இராணுவம் மட்டுமல்ல அது ஒரு நிர்வாகக் கட்டமைப்பும் ஆகும்

## அமைதி முயற்சியில் சமூக மட்டத்தில் கருத்துப் பரிமாறல்களும் தேவை



அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான சமீபகால முரண்பாடுகளின் இறுக்கமான தன்மையினை இருதரப்பினரும் வெளியிட்டுள்ள அறிக்கைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இரண்டு ஆண்டுகால அமைதி நீடித்துவரும் அதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பு ஓர் உயர் மட்ட இராணுவ மயப்பட்ட நிறுவனம் என்ற கருத்து விரிவடைந்து வந்துள்ளது. தனது எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வதற்காகச் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்வதாகவும் ஏராளமான தற்கொலைக் குண்டுதாரிகளை வைத்திருப்பதாகவும் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாவதாகவும் அவர்கள் பற்றிக் கூறப்படுகின்து. இந்தப் பின்னணியில் அவர்கள் எதிரிகளாகவும் முன் எச்சரிக்கையோடு அணுக வேண்டியவர்களாகவுமே கருதப்படுகின்றார்கள்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், புலிகள் பற்றிய இன்னொரு யதார்த்தபூர்வமான கருத்துச் சரியான முறையில் வெளிப்படுத்தப்படவில்லையென்பதாகும்.

இராணுவ ரீதியில் தன்னைப் பலப்படுத்தி நிர்வாக ரீதியிலும் வடக்கு - கிழக்கில் தன் அதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்ள முயல்வதோடு மட்டுமல்ல, அவர்கள் தமது உறுப்பினர்களில் ஒரு பகுதியினருக்கு ஜனநாயக நியமங்களை அறிந்துகொள்ளவும் மக்களை ஜனநாயக முறையில் வழிகாட்டவும் கூடப் பயிற்சியளிக்கிறார்கள்.

விடயங்களை ஒரு பின்னணியில் மட்டும் பார்ப்பது இலகு. ஆனால், உண்மை நிலை சிக்கலானது. பன்முகப்பட்டது; ஒரே விடயத்தைப் பல கோணங்களில் பார்க்கவேண்டிய தன்மை கொண்டது.

விடுதலைப் புலிகள் பொதுவில் ஓர் இராணுவ அமைப்பாக இருந்தாலும் அது ஓர் இராணுவ இயந்திரம் மட்டுமல்ல, அது ஒரு நிர்வாக அமைப்பும்கூட. பல நிர்வாகப் பிரிவுகள், நிர்வாகிகள், நலன்புரி அலுவலர்கள் என்று பல அம்சங்களைக் கொண்டுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் குறித்த அளவு சுயேச்சையாக இயங்கக்கூடியதாய் இது உள்ளது.

### அரசியல் பிரிவு

புலிகள் வளர்ந்துவரும் அரசியல் பிரிவொன்றையும் கொண்டிருக்கிறார்கள். இதனோடு அமைதிச் செயலகம் ஒன்றும் உள்ளது.

நல்லதோர் அரசுக்குரிய தரமான சிந்தனைகளில் இந்த அமைப்பு மிகுந்த பரிச்சயம் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள் மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் உயர்மட்டக் கல்வி அறிவைப் பெறுவதற்கான சுற்றுப் பயணங்களில் அனுப்பப்படுகிறார்கள். வன்னிப் பிரதேசத்துக்குள்ளேயே கல்வி மேம்பாட்டுக்கான வசதிகள் அவர்களுக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரமான அடிப்படைக் கல்வியை அவர்கள் பெறமுடிகின்றது.

வன்னியில் கல்விப் பணியை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பவர்களால் - அவ்வாறான சந்தர்ப்பம் எனக்கு அண்மையில் கிடைத்தது. இது பற்றி நம்பிக்கையோடு பேச முடியும். ஏனென்றால் அந்த சுதந்திரத்தை நாங்கள் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

விடுதலைப் புலிகள் தமது மூத்த மற்றும் நடுநிலை உறுப்பினர்கள் சிலரை சுதந்திரமாக கல்வி நிலை விசாரணைகளுக்கு உட்படுத்துவதற்கு அனுமதிக்கிறார்கள் என்பதிலிருந்து அவர்கள் தமது நோக்கங்களை அடைவதற்குப் புதிய வழிமுறைகளைப் பரீட்சிப்பதில் அர்ப்பணிப்பும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படுகின்றது. இந்த அர்ப்பணிப்பு வெறும் அடையாளமாக இருந்துவிடாமல் ஆழமானதாகவும் விரிவானதாகவும் அமையவேண்டும்.

எனவே, புலிகள் தமது குறிக்கோளை அடைவதற்கும் எந்தவொரு நிலைமையை எதிர்கொள்வதற்கும் தயாராய் இருப்பதற்குமாக இருவழி யுக்தி ஒன்றைப் பின்பற்றுகிறார்கள் என்று தெரிகின்றது.

அமைதிச் செயற்பாடுகள் மேம்படுமானால் புலிகளின் அரசியல் பிரிவின் பலம் அதிகரிக்கும். புலிகளின் உயர்மட்ட நிலைகளில் ஜனநாயகம் மற்றும் சமாதான சகவாழ்வு பற்றிய குரல்களும் வெளிப்படலாம். இன்னொருவகையில், நிலைமை மோசமடையுமானால் புலிகளின் இராணுவப் பிரிவு முதன்மைபெற்று தீர்மானம் எடுக்கும் நிலையை அது ஆக்கிரமித்துக் கொள்ளும்.

### சமூகத்தின் பொறுப்பு

புலிகளின் அரசியல் பிரிவும் சமாதானச் செயலகமும் தோன்றியிருப்பதானது வெளிச் சமூகத்தின்மீது ஒரு பொறுப்பை சுமத்தியிருக்கின்றது. இந்தப் போக்கினை வளர்த்தெடுக்கவேண்டும். வடக்கு - கிழக்கு மக்களின் தன்னாட்சி அரசிற்கான சமஷ்டி அமைப்பில் அனைவரும் ஒன்றாக வாழ்வதற்கு இது அவசியமாகும். அமைதி முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை அவசியம். மீண்டும் கடிகாரத்தைத் திருப்பி ஓடவைக்கும் எண்ணம் தேவையற்றது. மீண்டும் பழைய மத்திய அரசு நிலைக்குப் போகமுடியாது. ஏற்கனவே புலிகளால் உருவாக்கப் பட்டுள்ள சுயாட்சி அமைப்புக்களை அகற்றமுடியாது. அவை இணைத்துக் கொள்ளப்பட வேண்டியவை. புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான ஆலோசனைகளின்மீது நடைபெறும் பேச்சுகள் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் முட்டுக்கட்டை நிலவுவதால் அமைதி முயற்சிகளை முன்நகர்த்துவதற்கான வேறு வழிகளைப் பொதுநிறுவனங்கள் கண்டுபிடிக்கவேண்டும்.

இதில் ஒருவழி, பேச்சுக்களின் அடிப்படை தொடர்பான நிலைப்பாடுகளில் விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ளும்படி இருதரப்பினருக்கும் நெருக்குதல் கொடுப்பது.

இடைக்கால அதிகார சபைக்கான ஆலோசனைகளில் பிரதேசத்தின்பால் மத்திய அரசுக்குரிய பங்கு என்னவென்பது காணப்படவில்லை. மத்தியில் பிரதேசத்துக்குரிய பங்கும் வெளிப்படவில்லை. இவை முழுப் பிரச்சினைக்குமான பேச்சுகளின்போது முக்கியமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை.

புலிகளின் அரசியல் பிரிவை மேலும் வளர்ப்பதற்கு உதவும் இன்னொருமுறை யாதெனில், அதிக நேரத்தைக் கிளிநொச்சியில் செலவழித்து

**ஜெகான் பெரேரா**
**(தேசிய சமாதானப் பேரவை)**

அவர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதும், கல்விநிகழ்ச்சிகள் தொடர்பான இரு தரப்புப் பயணங்களுக்கு ஒழுங்குசெய்வதுமாகும். இது இரு தரப்புக்கும் பயனளிப்பதாக இருக்கும். இம்மாதிரி முயற்சிகளுக்குப் புலிகள் அனுசரணையாகவே நடந்துகொண்டுள்ளார்கள். வடக்கு - கிழக்குத் தவிர்ந்த நிறுவனங்களின் கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளின் போது அவர்களின் உறுப்பினர்கள் சுதந்திரமாகக் கருத்துககளை வெளியிடவும் அனுமதிக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகும்.

அமைதி முயற்சியின் பாற்பட்ட தொடர்புகளை மேம்படுத்துவதற்குப் பல்துறைபட்ட அணுகுமுறைகள் தேவை. பல தரப்பினரும் தங்கள் தங்கள் நிலைப்பாடுகள், விருப்பங்கள், அச்சங்கள், அங்கலாய்ப்புக்களைப் புரிந்துகொள்ளும் விதத்தில் தொடர் கருத்துப் பரிமாறல்களுக்கு வழிசெய்யப்பட வேண்டும். இவைகளில் சில முற்றிலும் இரகசியமாகவே இருப்பது அவசியம்.

எந்த ஒரு தரப்பும் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகப் பொது மக்களுக்கு அறிவித்துவிட்டால், பின்னர் நிலைப்பாட்டில் ஏதாவதில் மாற்றம் செய்ய நேரின், தமது தொகுதி மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடும் என்று அஞ்சவேண்டியிருக்கும்.

மக்கள் மத்தியில் அச்ச உணர்வை உருவாக்கும் விதத்தில் சில ஊடகங்கள் மிகமோசமான முறையில் எதிர்மறையாகச் செயற்பட்டுள்ளன; தீவிரவாதிகளின் கருத்துக்களுக்கும் இடமளித்துள்ளன. பலதரப்பினரும் தங்களுக்குள் இணங்கிப்போகும் வகையில் ஊடகத்துறையில் சுமுகமான சூழ்நிலை நிலவவேண்டும்.

### காலம் கடந்துவிட்டது

புலிகளுடன் இவ்வாறான கருத்துப் பரிமாறல்களிலும் கல்வித் திட்டச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதானது மீண்டும் கடிகாரத்தைப் பழைய நிலைக்குத் திருப்பிவிடும் முயற்சியாக ஒருபோதும் எடுத்துக்கொள்ளக்கூடாது. வடக்கு - கிழக்கில் ஒரு மத்திய தரபாடசாலையை அமைப்பதாய் இருந்தாலென்ன, ஒரு புதிய பொலீஸ் நிலையத்தை அமைப்பதாய் இருந்தாலென்ன, வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கை தொடர்பான தீர்மானங்களைக் கொழும்பில் இருந்து எடுக்கும் காலம் கடந்துவிட்டது. அதை மண்டும் கொண்டுவரமுடியாது. அங்கு இப்பொழுது புலிகளால் உருவாக்கப்பட்டுள்ள இன்னொரு நிர்வாக அடிமட்டத்திலான அமைப்பு செயற்படுகின்றது. அவர்களால் நிர்வகிக்கப்படும் பகுதிகளில் அது நிலைகொள்ளத் தொடங்கிவிட்டது.

புலிகள் ஏற்படுத்தியுள்ள அமைப்புக்களைக் களைந்துவிடுவதற்காக அல்ல இந்த வடக்கு - தெற்கு கலந்துரையாடல்களும், கல்வித்திட்டங்களும். மாறாக, நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள இருவித அமைப்பு முறைகளையும் இணங்கிப் போகச் செய்வதற்கான ஒத்துழைப்பாக இது அமையவேண்டும். இவை இரண்டும் இணங்கிப்போகாத விடத்து, அது பிரிவினைக்கே வழிகோலுவதாக அமையும் இரு அமைப்புகளுக்குமிடையிலான ஓர் இசைவு நிலை ஏற்படுமானால் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி கட்டமைப்பு ஒன்று ஏற்படுவது சாத்தியமாகும். இது ஆட்சி, நிர்வாகக் கட்டமைப்பு மட்டத்தில் மட்டுமல்ல, கல்வி, கலாசாரங்களை மக்களுக்கு மக்கள் பகிர்ந்துகொண்டு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மக்கள் ஒரே தேசத்தினர் என்ற முறையில் சந்தித்துக் கொள்ளவும் உதவும்.





**தமிழில்: நந்தன்**

---

# தனியார் பஸ் சாரதிகளுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜூலை3

தனியார் பஸ் சாரதிகளுக்கான போக்குவரத்துத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை யாழ். பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பொலீஸார் கட்டங்கட்டமாக நடத்தவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் தற்போது அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத் தடுக்குமுகமாக இவ்வாறான கருத்தரங்குகளைக் குழுக்களாக நடத்துவதற்கு யாழ். போக்குவரத்துப் பொலீஸார் தீர்மானித்துள்ளனர் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்முதற்கட்டமாக இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் போக்குவரத்துத் தொடர்பான கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் குறிக்கப்பட்ட சாரதிகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(-4-13)

# திஸாநாயக்காவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூலை3

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு எதிரான நீதிமன்ற அவதூறு வழக்கு விசாரணையை உயர்நீதிமன்றம் செப்ரெம்பர் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்திருக்கிறது.

எஸ்.பி.திஸநாயக்கா நீதிமன்றத்தை அவமதித்தார் எனத் தெரிவித்துத் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவர் நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

எஸ்.பி.திஸாநாயக்கா சுகவீனமுற்றிருப்பதனால் அவரால் நீதிமன்றில் ஆஜராகமுடியவில்லை எனத் தெரிவித்த அவரது சட்டத்தரணி, வைத்திய சான்றிதழையும் சமர்ப்பித்தார்.

ஆனால், குறித்த வைத்திய சான்றிதழ் அரச மருத்துவமனையில் அல்லாது தனியார் வைத்தியசாலையில் பெறப்பட்டிருப்பதைக் காரணம் காட்டி அச்சான்றிதழை ஏற்றுக் கொள்ள முடியாதெனத் தெரிவித்து உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர்கள் குழு இவ்வழக்கை விசாரணைசெய்து வருகின்றது. (க)

# சமாதான முயற்சி முன்னெடுக்கப்படுவதையே

# இராணுவம் விரும்புகிறது என்கிறார் புதிய தளபதி

யுத்தம் செய்வதைவிட சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதையே இராணுவம் விரும்புகிறது. அரசு முன



னெடுக்கும் சமாதான முயற்சிக்கு இராணுவம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு நல்கும்.

இலங்கை இராணுவத்தின் 17 ஆவது தளபதியாக மேஜர் ஜெனரல சாந்த கொட்டே கொட நேற்றுமுன்தினம் பதவியேற்றார். இராணுவத் தலைமையகத்தில் உத்தியோகபூர்வமாக அவர் பதவியேற்ற பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக யுத்தம் ஓய்ந்துள்ளது. தொடர்ந்தும் இந்த அமைதி நிலையைக் கடைப்பிடிக்க இராணுவம் தன்னால் இயன்றளவிலான ஒத்துழைப்பை அரசுக்கு நல்கும்.

பேச்சுக்கள் பரஸ்பரம், இதயசுத்தியுடன் நடைபெறவேண்டும். சமாதானப் பேசசுக்கள் வெற்றியடைவதும், தோல்வியடைவதும், அரசியலோடு சம்பந்தப்பட்ட விடயம்.

இந்தச் சமாதான சூழ்நிலை காரணமாக இராணுவத்தை மேலும் பலப்படுத்தக்கூடிய ஒரு சூழல் உருவாகியது. யுத்தம் நடைபெற்ற காலத்தில் உரிய முறையில் பயிற்சிகள் பெறாமல் படையினர் யுத்தகளத்துக்குச் சென்றனர். இன்று அந்தநிலை களையப்பட்டுள்ளது. புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் இராணுவத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப முடியாத ஒருநிலை உருவாகியுள்ளது.

செய்தி ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்து இராணுவத்துக்கு ஆள்களை இணையவைக்க ஊக்குவிக்க வேண்டும். கெரில்லாப் போர் முறையில மிகவும் நீண்ட அனுபவத்தைக் கொணடிருக்கும் உலகின் சிறந்த இராணுவமாகத் திகழும் அமெரிக்க இராணுவம், கெரில்லாப் போர் முறையைத் தடுப்பது தொடர்பான ஆலோசனைகளைக் கேட்டுள்ளது.

நாட்டில் எப்படியான நிலையேற்பட்டாலும், இராணுவம் தன்னைப்பலப் படுத்திக்கொள்ள வேண்டும். பலத்துடன் இருந்துகொண்டே சமாதானத்தை நிலைநிறுத்தவேண்டும்.

இலங்கை இராணுவம் நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. உலகில் எந்த இராணுவத்துடனும் ஈடு கொடுககும் நிலையில் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டையும், மக்களையும் பாதுகாக்க வேண்டிய பிரதான கடப்பாட்டை அது கொண்டுள்ளது - என்றார் புதிய இராணுவத் தளபதி.

"இராணுவ புலனாய்வுப் பிரிவினர் விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாகத் தாங்கள் என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளீர்கள்?" - எனச் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெறுவதை முற்றுமுழுதாகத் தடுக்க முடியாது. இருப்பினும் உரிய பாதுகாப்புத் திட்டங்களையும், வியூகங்களையும் வகுத்துச் செயற்பட்டு வருகிறோம். பாதுகாப்புக்கருதி அவற்றை அம்பலப்படுத்த முடியாது.

இராணுவத்தில் பல குறைபாடுகள் உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்யப் போதுமான நிதியில்லை. இராணுவத்தை மேலும் பலப்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டே சகலதும் செய்யவேண்டியுள்ளது. - என்றார் புதிய தளபதி.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகிய கருணாவுக்கு படையினர் பாதுகாப்பு வழங்குவதாக வெளிவரும் செய்திகள் குறித்து அவரிடம் கேட்டபோது-

கருணா எப்படிக் கொழும்புக்கு வநதார் என்று கேள்வி எழுப்புகின்றனர். இன்றைய சூழலில் யார் வேண்டுமானாலும் இலங்கையில் எந்தப் பகுதிக்கும் பிரவேசிக்க முடியும். அதை எம்மால் தடுக்க முடியாது. அரசியல்வாதியொருவருடன் அவர் கொழும்புக்கு வந்தார் என்பதை செய்தி ஊடகங்கள் மூலமே நான் தெரிந்து கொண்டேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்துசென்ற கருணா இந்தத் தருணத்தில் எங்கே? என்பது எனக்குத் தெரியாது, நான் உங்களுக்குச் சொல்வது மிகவும் உண்மை.

ஆனால், கருணா தரப்புக்கு இராணுவம் உதவுகின்றது என்று விடுதலைப் புலிகள் நம்பினால் ஸ்தம்பிதமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும்.

புலிகள் அமைப்பில் ஏற்பட்ட பிளவு சமாதான நடவடிக்கைகளை மிகவும் கடினமாக்கப் போகின்றது. இந்தமாதிரியான நடவடிக்கைகளில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது என்று புலிகள் கருதுவார்களேயானால் இது காலவரையும் நாம் மேற்கொண்ட நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குழம்பிவிடும். எங்களுக்குத் தெரியாமல் இந்த (கருணா) விவகாரத்தில் இராணுவம் சம்பந்தப்பட்டிருக்குமானால் நிச்சயமாக அது பிழையான விடயம். எதிர்காலத்தில் இந்த மாதிரியான விடயங்கள் இடம் பெறாமலிருப்பதை நான் உறுதிப்படுத்துவேன் - என்றார் புதிய தளபதி.(க)

## வெள்ளைநிற நாகபாம்புகள்

வலி.தென்மேற்கு,ஜூலை3

பண்டத்தரிப்பு கீரிமலை வீதியிலுள்ள வீட்டுக்கிணறு ஒன்றில் இரு வெள்ளை நிற நாக பாம்புகள் படம் எடுத்த நிலையில் காணப்பட்டமை அப்பகுதி மக்களிடையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் செய்தியை அறிந்த பெரும் எண்ணிக்கையானோர் அங்கு சென்று பாம்புகளைப் பார்வையிட்டனர்.(எ-135)

## ஆயுள்காப்புறுதி தொடர்பான விரிவுரை

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றம் ஆயுள் காப்புறுதி தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தவுள்ளது.

யாழ்.கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இக் கருத்தரங்கில் விரிவுரைகளை ஆயுள காப் புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர். கோபிநாத் மற்றும் பிரதம சந்தைப் படுத்தல் அதிகாரி செர்மன் குணதிலக ஆகியோர் வழங்குவார்கள். பாடசாலை மாணவாகள் மற்றும் ஆசிரியர்களை இக்கருத தரங்கில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுளளது. (ஐ-9)

# முன்னைய அரசு வழங்கிய காணி உறுதி, குத்தகைகள் ரத்து

## அமைச்சரவைத் தீர்மானம் இது

கொழும்பு,ஜூலை3

முன்னைய அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் அரச காணிகளின் குத்தகை மற்றும் விற்பனையில் இடம்பெற்றுள்ள பாரிய மோசடிகளில் சம்பந்தப்பட்டுள்ளனர். இதனால் முன்னைய அரசாங்கக் காலத்தில் வழங்கப்பட்ட காணி உறுதிகள், குத்தகை ஒப்பந்தங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும். சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும், உறவினர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு காணி,விவசாய, கால்நடை அபிவிருத்திகள் அமைச்சர் அநுரதிஸநாயக்கா முன்வைத்த சிபார்சுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் அநுர திஸநாயக்கா இதனைக் கூறினார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழு, அரச பெருந்தோட்ட யாக்கம், மக்கள தோட்ட அபிவிருத்தி, நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு சொந்தமான காணிகளே இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளன.

கம்மடுவ, தியத்தலாவ, வூட்சைட, மொண்டி கிரிஸ்ட்டோ ஆகிய பெருந தோட்டக் காணிகள் எந்தவிதமான கேள்வி அறிவித்தலும் கோரப்படாமல் சில தனியார் நிறுவனங்களுக்கும், தனியாருக்கும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் சரியான பெறுமதிகள் மதிப்பிடப்படாமல் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் அரசின் ஆதரவாளர்களுக்கும், கட்சிக்கு உதவி வழங்கியவர்களுக்குமே வழங்கப்பட்டுள்ளன. இது தேசிய சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததாக மட்டுமன்றி பாரிய மோசடியாகவும் கருதப்படுகின்றது.

எனவே, இவ்வாறு வழங்கப்பட்ட காணி உறுதிகள், குத்தகை ஒப்பந்தங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும்.

இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென சீ.ஜி. விக்கிரமசிங்க தலைமையிலான மூவர் அடங்கிய விசாரணைக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இதுவரை நடைபெற்ற மோசடிகளைக் கண்டறிவது மட்டுமன்றி எதிர்காலத்தில் இப்படியான ஊழல்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மோசடிகளுடன் தொடர்புடைய அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மீதான விசாரணைகள் மேற்கொள்ளபபடும். குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு எதிராகப் பாரபட்சமற்ற முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் அநுர திஸநாயக்க கூறினார். (க)

# அனுமதியின்றி மதுபானம் விற்போர்மீது நடவடிக்கை

## மதுவரித் திணைக்கள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை3

குடாநாட்டில் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதமாக மதுபான வகைகளை விற்பனை செய்வோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது. யாழ்.மதுவரித்திணைக களப் பொறுப்பதிகாரி நா.சோதிநாதன் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் அண்மைக்காலமாக குறிப்பாக, ஏ-9 பாதை திறந்த பின்னர் போதைப்பொருள்களின் பாவனை கிராம மட்டத்திலும் பரவியுள்ளது.

இதனைவிட சட்டவிரோதமாகக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் புதிதுபுதிதாக மதுபானச்சாலைகள் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

இது தொடர்பாக, எமது திணைககளத்திலும், பொலீஸ் நிலையங்களிலும் பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இந்த விவகாரம் தொடர்பாக விடயமறிந்தவர்கள் - சமூக நலனில் அக்கறை கொண்டவர்கள் மதுவரித் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 222 3451 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு தகவல்களைத் தெரிவிக்கமுடியும்.

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதும் எமது திணைக்கள அதிகாரிகள் உரிய இடத்திற்கு நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்டவர்களையும், பொருள்களையும் மீட்டுப் பொலீஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பர். பின்னர் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-13)

# ஐரோப்பிய காற்பந்துக் கிண்ணம்

ஐரோப்பிய கிண்ணக் காற்பந்துச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு போர்த்துககல் மற்றும் கிறீஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் போர்த்துக்கல் - ஹொலண்ட் அணிகள் மோதின. இதில் 2-1 என்ற வித்தியாசத்தில் போர்த்துக்கல் அணி வெற்றியீட்டியது.

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கிறீஸ் - செக் குடியரசு அணிகள் மோதின. இதில் 1-0 என்ற வித்தியாசத்தில் கிறீஸ் அணி வெற்றியீட்டியுள்ளது.

இதன் மூலம் இறுதிப்போட்டியில் போர்த்துக்கல் அணியும் கிறீஸ் அணியும் மோதவுள்ளன. இந்த இரண்டு அணிகளும் ஐரோப்பியக் கிண்ணப் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும்.

கால் இறுதியாட்டத்தில் போர்த்துக்கல் அணி இங்கிலாந்து அணியை வெற்றியீட்டியும் ஹொலண்ட அணி சுவீடன் அணியை வெற்றியீட்டியும் கிறீஸ் அணி பிரான்ஸ் அணியை வெற்றியீட்டியும் செக் குடியரசு அணி - டென்மார்க் அணியை வெற்றியீட்டியும் அரையிறுதிக்குள் நுழைந்திருந்தன.

16 அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 'ஏ' பிரிவில் போர்த்துக்கல், கிறீஸ், ஸ்பெயின், ரஷ்யா ஆகியனவும் -

'பி' பிரிவில் பிரான்ஸ், சுவிஸ்லர்லாந்து, இங்கிலாந்து, குரோசியா ஆகியனவும் -

'சி' பிரிவில் சுவீடன், டென்மார்க், இத்தாலி, பல்கேரி ஆகியனவும் -

'டி' பிரிவில் ஜேர்மனி, செக் குடியரசு, ஹொலண்ட், லெத்வியா ஆகியனவும் இடம்பெற்றிருந்தன.

## எந்த அணிக்கு....?

கடந்த மாதம் 12 ஆம் திகதி போர்த்துக்கலில் இந்தப் போட்டிகள் ஆரம்பமாகின. பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பமாகிய போட்டிகளில் கலந்துகொள்ளும் அணிகளில் குறிப்பிட்ட சில அணிகளே கிண்ணத்தைக கைப்பற்றக்கூடும் என்று கிரிக்கெட் ரசிகர்களாலும் அவதானிகளாலும் கருத்துக்கள் கூறப்பட்டன.

ஜெயாஸ்ரீ

ஆனால் அந்தக் கருத்துக்களை எல்லாம் பொய்யாக்கிவிட்டு போர்த்துககல் அணியும் கிறீஸ் அணியும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற அணிகளில் ஒன்றே கிண்ணத்தை வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் இவற்றுள் ஓர் அணியேனும் அரையிறுதிக்குக் கூடத் தகுதிபெறவில்லை. ஆனால், போர்த்துக்கல் நாட்டில் போட்டிகள் நடைபெறுவதால போர்த்துக்கல் அணிக்கும் வெற்றி வாய்ப்பு உள்ளதாகச் சிலர் கருத்துக்கள் கூறியிருந்தனர்.

எப்படியாயினும் தற்பொழுது போர்த்துக்கல் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுவிட்டது. நான்கு பிரிவுகளாக அணிகள் யாவும் பிரிக்கப் பட்டிருந்தபோதும் 'ஏ' பிரிவில் இடம் பெற்ற அணிகளான போர்த்துக்கல் அணியும் கிறீஸ் அணியும்தான் இறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரையிறுதிப் போட்டிகளில் மோதிய நான்கு அணிகளில் இரண்டு அணிகள் 'ஏ' பிரிவிலும் மற்றைய இரு அணிகள் 'டி' பிரிவிலும் இடம்பெற்ற அணிகளாகும்.

எது எப்படியோ தனது நாட்டில் நடைபெறுகின்ற ஐரோப்பியக் கிண்ணப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் கிறீஸ் அணியுடன் 2-1 என்ற வித்தியாசத்தில் தோல்வியுற்ற போர்த்துக்கல் அணி இறுதியாட்டதில், மீண்டும் சந்திக்கின்ற கிறீஸ் அணியை வெற்றியீட்டிக் கிண்ணத்தைக் கைபபற்றுமா?

# ஜூலை மாதம் நடுப்பகுதிக்குள் பட்டதாரிகளுக்கு நியமனம்

கொழும்பு,ஜூலை3

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் அடுத்த இரு வாரங்களுக்குள் வழங்கப்படவுள்ளன.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது:

நேர்முகப் பரீட்சையில் தோற்றி தெரிவு செய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்களை அரசு வழங்கவுள்ளது.

அத்துடன் இந்தமாத இறுதிக்குள் ஜீ.சி.ஈ.உயர்தரம் மற்றும் சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

அரசு, தெளிவான கொள்கைக்கு அமையவே வேலை வாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதில் எந்தவித சிக்கல்களும் ஏற்படவில்லை. இத் திட்டத்துக்குத் தேவையான தொளாயிரம் மில்லியன் ரூபாவை 2004ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஊடாக வழங்கவுள்ளோம் - என்றார். (எ-9-7)

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு

## தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும்

## 1வது தமிழீழ இளையோர் தேசிய தட களப் போட்டி

03ஆம், 04ஆம், 07 – 2004 திகதிகளில்

யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வெற்றி பெறும் வீர, வீராங்கனைகளுக்கான பதக்கங்கள், பரிசில்கள் வழங்கப்படுவதுடன் இந்தப் போட்டியில் சிறந்த தெரிவு வீரர்கள் தேசிய, சர்வதேசிய போட்டிகளில் கலந்துகொள்வதற்கான குழுவிற்குள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

### வீரர்களின் எதிர்கால வளர்ச்சி கருதி

### அனுசரணை வழங்குபவர்கள்


**புவிதா கிறீம்ஹவுஸ்**

56, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.




HERO HONDA World No. 1 Two-Wheeler Company

2 Year Warranty

இரத்தினகோபால்ஸ்

65,63 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 0777-340056 ☎: 021-222-6185

PRESENTED BY

**TILKO Holidays (Pvt) Ltd,**

**Hotels and Guest Houses**

No .65, Sangamita Avenue,
Mt.Lavinia, Sri Lanka.
Tel: 011 2713803, Mobile: 0777 - 67 90 85
Jaffna : 021 222 59 69
E.mail : tilkoholidays@yahoo.com

TILKO Holidays

**ROLEX PRODUCT**

**ROLEX" BAKE MART,**
**118, Kasthuriar Road, Jaffna**


## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இசைப் ...ர்களுக்கோர் அரிய வாய்...

“முகாமை நோக்கு” சஞ்சிகை வெளியீட்டிற்...

யாழ். முன்னணி இசைக் கலைஞர்களுடன்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து

வழங்கும் மாபெரும் இசைநிகழ்ச்சி

## சிகரங்களின் சங்கமம்

இடம்: கைலாசபதி கலையரங்கு,
யாழ். பல்கலைக்கழகம்

காலம்: நாளை (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை

நேரம்: முதலாம் காட்சி காலை 10.00 மணி
2 ஆம் காட்சி மாலை 3.00 மணி

அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

முகாமைத்துவ மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(34-19-13-21)

விளம்பர அனுசரணை: சிற்றி ரெலிக்கொம்

பரமேஸ்வராச் சந்தி. (37692) திருநெல்வேலி.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
16.11.1924

விண்ணுலகில்
15.06.2003

திருமதி

### தெய்வானைப்பிள்ளை செல்லையா

திதி 03.07.2004

அரிய தவம் செய்து அன்போடு பெற்றெடுத்து
ஆனந்தமாய் வளர்த்து கண்போலக் காத்து அரவணைத்தாய்
அகல முடியாத சூழ்நிலையில் காலன் வலைப்பட்டு எம்மை
ஆறாத்துயரில் விட்டு அண்ணல் அடிசேர்ந்தாயே
ஆண்டொன்று போனாலும் அம்மா ஆறாது எம் துயரம்.

ஓம் சாந்தி!

‘குமரகோட்டம்’
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (33676)(37-21-19-13)

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 15ஆவது வருட நினைவஞ்சலி

மலர்வு
01 • 02 • 1919



உதிர்வு
20 • 06 • 1989

### திருமதி இராசம்மா சுப்பிரமணியம்

(பூமணி)

திதி 03-07-2004

எம்மை விட்டுப் பிரிந்து இறையடி சேர்ந்து
பதினைந்து ஆண்டுகள் சென்றாலும் நீங்கள்
என்றும் எங்கள் உள்ளங்களில்
அணையாத ஜோதியாக வீற்றிருப்பீர்கள்!

என்றும் உங்களை நினைவு கூரும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமதி மல்லிகா கதிர்வேற்பிள்ளை
4, பெட்டிக்கா வீதி,
கொழும்பு 6 . T.P [illegible] ([illegible])

'கணேசபவனம்'
தாவடி தெற்கு,
கொக்குவில்.

க. இராஜேந்திரா
[illegible]
[illegible]
T.P 011 - [illegible]

## ஆஸ்பத்திரி விடுதி கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட 21ஆவது அணி மாணவர்களினால் புனரமைக்கப்பட்ட தெல்லிப்பழை மனநோயாளர் வைத்தியசாலையின் பெண்நோயாளர் விடுதியைக் கையளிக்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் சுன்னாகம் கிளையின் நிதியுதவியுடனும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட 21ஆவது அணியின் முதலாம் பிரிவு மாணவர்களின் அனுசரணையுடனும் புனரமைக்கப்பட்ட இந்த விடுதியை வங்கியின் முகாமையாளர் ஏ.ஆர். குலேந்திரன் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிப்பார்.

(ஜ-13)

## அனுமதியின்றி ஓட்டோவில் சாராயம்! இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். நகரில் அனுமதிப்பத்திரமின்றி ஆட்டோவில் சாராயம் ஏற்றி வந்த இரு இளைஞர்கள் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 8மணியளவில் யாழ். புகையிரத நிலைய வீதியால் ஓட்டோவில் சாராயம் ஏற்றி வரப்படுவதை அறிந்த பொலீஸார் அதனைச் சோதனையிட்டபோது, அதனுள் இருந்த பெருமளவு சாராயத்தைப் பறிமுதல் செய்ததுடன், அதில் இருந்த இருஇளைஞர்களையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஓட்டோ சாரதியும் மற்றைய இளைஞரும் யாழ். பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைகக்கப்பட்டுள்ளனர். (4-13)

## கல்விக் கண்காட்சி

தென்மராட்சி,ஜூலை3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கல்விக் கண்காட்சி எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலயத்தின் 55 பாடசாலைகளைச சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் ஆக்கப் பொருள்களும், காப்புறுதி நிறுவனங்கள், வங்கிகள், பனை அபிவிருத்திச் சபை, கமத்தொழில் நிலையங்கள் ஆகியவற்றின் ஆக்கப் பொருள்களும் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

ஜூலை 16ஆம் திகதி மாணவர்களும், 17ஆம் திகதி பெற்றோரும், ஏனையோரும் கண்காட்சியினைப் பார்வையிடலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்ட ஆக்கப்பொருள் கண்காட்சியில் தெரிவுசெய்யப்பட்ட 10 ஆக்கப்பொருள்களும், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தலா 10 ஆக்கப் பொருள்களும், கனிஷ்ட இடைநிலை, (தரம் 6,7,8) சிரேஷ்ட இடைநிலை (தரம் 9,10,11) உயர்பிரிவு (தரம் 12,13) ஆகியவற்றில் ஒவ்வொரு பாடத்திலும் தலா மூன்று ஆக்கப் பொருள்கள் இந்தக் கல்விக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (4-117-31)

## ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பு

தென்மராட்சி,ஜூலை3

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக்கிளை, சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி பொருள்களை கடந்த வாரம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சிறுவர் பிரிவுக்கென மேசை மின்விசிறியும், வெளிநோயாளர் பிரிவுக்கென ஒரு தொகுதி தளபாடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிக்கிளை முகாமையாளர் க.இராஜகோபால் மற்றும் உத்தியோகத்தர் இப்பொருள்களை ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளித்தனர். (ஜ-117)

## தென்மராட்சி வலய தமிழ்த்தின போட்டிகள்

தென்மராட்சி,ஜூலை3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட தமிழ்த் தினப்போட்டிகள் எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

போட்டிகள் நடைபெறும் இடங்கள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் தெரிவித்துள்ளார். (4-117)

## நெஞ்சகலா நினைவலைகள் 31 ஆம் நாள்

தாயின் மடியில்
30 • 07 • 1938



இறைவன் அடியில்
03 • 06 • 2004

அமரர்

### இராஜேந்திரம் எமிலியானுஸ்

“அழைப்பின் குரல் கேட்டேன்
என் ஆண்டவன் என உணர்ந்தேன்”

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (03-07-2004) சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்குகொண்டு இவருக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(திருப்பலி முடிந்ததும் வீட்டிற்கு வரவும்)

இல.9,3 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.
(சி35962)(37-21-19-13)

## ஓராண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
17 ~ 02 ~ 1974



அலை மடியில
14 ~ 07 ~ 2003

### அமரர் தவராசா புவனேஸ்வரன்

(புவனம்)

திதி: 03-07-2004

செல்லப்பிள்ளையாய் சிரித்து ~ எம்
உள்ளங்கள் நிறைத்தவனே ~ நம்
நாட்டின் நிலையதனால் பிறநாடு
புறப்பட்டாய் புது மனிதனாய் ~ அன்று
உன்னை வழியனுப்பி நின்ற காட்சி ~ இன்றும்
கண்சிமிட்டுதையா எம் முன்னாலே.
அண்ணனோடு ஆனந்தமாய்
கூடிநின்றாய் அந்நிய தேசத்திலே.


எட்டு ஆண்டுகள் கழித்து ~ எம்மைக்
காண ஓடி வருகிறேன் என்றாய்
வந்ததய்யா......... வந்தது.........
கடலலையில் நடந்த துன்பம்
காற்றலையில் வந்தது.
காற்றலையில் கடைசியாய் ~ நீ
கதைத்த இரவு விடியுமுன்னே ~ நம்
வாழ்க்கை இருண்டதையா.
பாசத்தின் சிகரமே..... அன்பின் ஆலயமே
ஓராண்டு போனாலென்ன.... நூறாண்டு ஆனாலென்ன....
வற்றிடாதையா உன் நினைவுச் சமுத்திரம்.

அமரர் தவராசா புவனேஸ்வரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (03.07.2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றது. இவ்வைபவத்தில் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய பொலீஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய் (33709)(43-21-13-19)

வெ.தவராசா
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### பொன்னையா தவராசா

(உடுப்பிட்டி)

‘பொன்பதி’, உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா-அழகாம்பிகையின் மகன் பொன்னையா தவராசா 29.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கல்வத்தையைச் சேர்ந்த செல்வராணியின் அன்புக் கணவரும் விணோத், தேனுஷா, தனுஷா, தாரணி, திசானி, திசான், நிரோஷா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி மற்றும் விக்னேஸ்வரி, வசந்தமலர், புஸ்பமலர், கருணாநிதி, செல்வி யோகேஸ்வரி, தயாபரன், சூரியகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் முனிஜயா, பன்னீர்ச்செல்வன், ரமேஷ், விஜயகுமார், லலிதா, திரேசா, சிவகலா, இரத்தினராசா, செல்வபூபதி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 1.00 மணிக்கு கரம்பவளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

“பொன்பதி” உடுப்பிட்டி. (33717) (43-21-13-19)

தகவல்: குடும்பத்தினர்.



மக்கள் வங்கியின் 43 ஆவது ஆண்டு நிறைவுவிழா யாழ். கன்னாதிட்டிக் கிளையில் கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. ஜயசிறி சீட்டிழுப்பில் பரிசுபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அன்றைய தினம் பிற்பகல் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் வடவலய உதவிப் பொதுமுகாமையாளரும், விசேட நிறைவேற்று அதிகாரியுமான சி.இளம்பிறைநாதன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். அப்படத்தில் கன்னாதிட்டிக் கிளையின் முகாமையாளர் ஏ.குகதாசனும் காணப்படுகின்றார். இரண்டாவது படத்தில் பிராந்திய உதவி முகாமையாளர் து.ரகு வாடிக்கையாளர் ஒருவருக்கு பரிசுத்தொகை வழங்குவதையும் பிராந்திய முகாமையாளர் மத்தியில் நிற்பதையும் காணலாம். (படங்கள்: தேவா)

# கொழும்புப் பங்குச்சந்தை இயங்கும் நேரம் நீடிப்பு

## பங்குத் தரகர்களின் வேண்டுகோளை அடுத்து

கொழும்பு,ஜூலை3

கொழும்புப் பங்குச்சந்தை கூடும் நேரம கடந்த வியாழக்கிழமை முதல ஒரு மணித்தியாலத்தால் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி, வழமையாக வேலைநாள்களில் காலை 9.30மணி முதல் மதியம் 12.30 மணிவரை இருந்த பங்குச்சந்தை நேரம் ஒரு மணித்தியால அதிகரிப்பைத் தொடர்ந்து மதியம் 1.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்நேர அதிகரிப்பு பங்குத் தரகர்களின் வேண்டுகோளின்படி நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. கொழும்புப் பங்குச்சந்தை கடந்த காலங்களில் ஏற்பட்ட உயர்வுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்த நேர அதிகரிப்பினை முதலீட்டாளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளார்கள்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் கொழும்புப் பங்குச்சந்தையின்கிளை நிறுவனத்தின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி இங்கு வருகைதரவுள்ளது. இந்தப் பிரதிநிதிகள் இங்கு பங்குச்சந்தை மற்றும் அரசதிறைசேரி உண்டியல் தொடர்பான வசேட விளக்கக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர்.

இதற்கிடையில், கடந்த வியாழக்கிழமை கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்துப் பங்குகளின் குறிகாட்டி 8.84 புள்ளிகளினாலும், மிலங்கா பங்குகளின் குறிகாட்டி 22.25 புள்ளிகளினாலும் அதிகரித்துள்ளது.

இதேசமயம், பங்குச் சந்தையில் நிரல்படுத்தப்பட்ட நிறுவனமான "கல்டெக்ஸ்" எண்ணெய் நிறுவனம் இடைக்கால பங்கு இலாபமாக 300 சதவீதத்தினை வழங்குவதாக அறிவித்தமை முதலீட்டாளர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

# மூன்றாவது ஆண்டில் கால்பதிக்கும் இணுவில் கணனியியல் கல்லூரி

வலிகாமத்தில் தனக்கென ஒரு தனிமுத்திரையைப் பதித்து இரண்டு வருடங்களை நிறைவுசெய்து மூன்றாவது ஆண்டில் வெற்றிகரமாகக் காலடிபதிக்கிறது இணுவிலில் அமைந்துள்ள கணனியியல் கல்லூரி. தற்போது இதன் கிளை திருநெல்வேலி பலாலி வீதியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

2001ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி சொற்பளவு மாணவர்களுடன ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் முதலாவது ஆண்டு நிறைவில் மாணவர்கள் தொகை நூற்றுக்கும் மேற்பட்டிருந்தது. அதன் பின் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கணனிக் கருத்தரங்கின் அடிபபடையிலான புலமைப்பரிசில் பரீட்சையில் ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றித் தற்போது நானூறு பேர் வரையில் பயின்று வருகிறார்கள்.

பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனத தலைமைகளின் அனுமதியுடன் அவற்றில் பயில்கின்ற மாணவர்களுககுக் கணனி பற்றிய அடிபபடை விடயங்களைப் போதித்து, கருத்தரங்கில் வழங்கப்பட்ட விடயப்பரப்பினுள் பரீட்சை ஒன்றினை நடத்தி, பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மிகத் திறமையாகத் தோற்றிய எண்பது வரையான மாணவர்களுக்கும், பல வசதி குறைந்த மாணவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் கற்கைநெறிக்கட்டணம் முற்றாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களுக்கு அவர்களது திறமையின் அடிப்படையில் சலுகை வழங்கப்பட்டுவருகிறது.




இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் பதிவுக்கட்டணத்தை ஒரு முறை மட்டும் செலுத்திய பின் தொடர்ந்து எத்தனை கற்கைநெறிகளையும் பயிலக் கூடியதாக உள்ளது. இந்நிறுவனத்தில் மைக்ரோசொப்்ற் ஒவிஸ் (Microsoft Office), டெக்ஸ்ரொப் பப்ளிஸிங் (Desk top Publishing), வீடியோ மிக்ஸிங் (Video Mixing), இன்ரநெற் - ஈமெயில் (Internet & E-Mail) போன்ற கற்கைத் தெரிவுகளுக்கான டிப்ளோமா கற்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அத்துடன், ஒவ்வொரு டிப்ளோமா தொகுதியினுள்ளும் அடங்கும் அலகுகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக (Module Classes) நடத்தப்பட்டு வருகின்றது. யாழ். மாவட்டத்திலேயே மிகவும் உயர்ந்த தரத்தில் வீடியோ மிக்ஸிங் கற்கையை வழங்கும் நிறுவனங்களுள் இந்நிறுவனம் சிறப்பாகத் திகழ்கின்றது.

இங்கு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களின் வசதிக்கேற்றவாறு இரவு நேரங்களிலும் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. அவரவர் வசதிக்கேற்றவாறு தனிநபர் வகுப்புக்களும், குழு வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன.

# அரசின் கேள்வி ஒப்பந்தங்களை அங்கீகரிக்கவெனப் புதிய சபை

கொழும்பு,ஜூலை3

அரசின் வெவ்வேறு அமைச்சுக்களால் மேற்கொள்ளப்படும் பாரிய அளவிலான கொள்வனவுகள் தொடர்பான கேள்விகள் ஒரே சபை மூலமாகவே பரிசீலனை செய்யப்பட்டு அனுமதி வழங்கப்படவேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது.

அதுபோன்றே, அரசுமூலம் வழங்கப்படும் செயற்றிட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான சகல அதிகாரங்களும் அந்த சபைக்கே வழங்கப்படவேண்டுமெனவும் அரசு தீர்மானித்துள்ளதாகத் திறைசேரியின் செயலாளர் கலாநிதி பீ.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய திறைசேரியின் முன்னாள் பிரதிச் செயலாளர்களில் ஒருவரான தயா லியனகே தலைமையில் தேசிய வழங்கல் ஒன்றியம் என்ற பெயரில் புதிய சபை ஒன்று நிறுவப்படவுள்ளது. நாட்டின் கேள்விகோரல் செயற்பாடுகள் தொடர்பாகப் புதிய சட்டங்களையும் இச்சபை நடைமுறைப்படுத்தவுள்ளது எனவும் திறைசேரியின் செயலாளர் மேலும் விளக்கியுள்ளார்.

யுத்ததளபாடங்கள், விமானங்கள், கப்பல்கள் போன்றவற்றைக் கொள்வனவுசெய்தல், பெருந்தெருக்கள் மற்றும் அதிவேகப் பெருந்தெருக்கள் அமைத்தல் தொடர்பான ஒப்பந்தங்கள் வழங்கல் போன்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் இந்நிறுவனம் மூலமாகவே தீர்மானிக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது. அடுத்த சில வாரங்களில் இந்நிறுவனம் நிறுவப்படவுள்ளது எனவும் கலாநிதி ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## சொக்லேட் தொழிற்சாலை ஆரம்பிக்க ஒப்பந்தம்

இலங்கையில் சொக்லேட்டுகள் உட்பட இனிப்புப் பண்டங்களை உற்பத்திசெய்யும் திட்டம் ஒன்றை ஆரம்பிபபதற்காக முதலீட்டுச் சபை வெளிநாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செயதுள்ளது

பெல்ஜியத்தை மையமாகக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம், கொழும்பில் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இருக்கிறது.

இதன்மூலம், பலருக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறே தைக்கப்பட்ட ஆடைகள், கணனி உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை உற்பத்திசெய்வது தொடர்பாகவும் திட்டங்களை ஆரம்பிப்பது சம்பந்தமாகவும் முதலீட்டுச் சபை வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி வருகிறது.

# இலங்கையில் முதலீடு செய்ய உகந்த சூழ்நிலை உண்டு

## சிங்கப்பூர் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை3

இலங்கையில் முதலீடு செய்து கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் சிங்கப்பூர் பிரதமர் கோச்சொக் டோங்.

சிங்கப்பூர் பிரதமர் அண்மையில் இலங்கைக்கு விஜயஞ்செய்திருந்தார். அப்போது கொழும்பில் வர்த்தகப் பிரமுகர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். அந்த உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'சிங்கப்பூர் அரசு தெற்காசியநாடுகளில் பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக்கொள்வதில் ஆர்வமாக வுள்ளது என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பூர் பிரதமர், இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அழைப்பின் பேரில் இலங்கையில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்தார்.

(ஒ)

# தமிழ் மாணவர்களுக்கான ஆலோசனைகள் இலவசம்

இப்போது கொழும்பில் எமது தமிழ்பேசும் மாணவர்களும், இளைஞர்களும் வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வெளிநாட்டுத்தொழில் முயற்சிகளிலும் பலவகையான சிரமஙகளை எதிர்கொள்கின்றனர். சரியான வழிகாட்டல் இல்லாமையினால் போலி வெளிநாட்டு முகவர்களாலும் ஏமாற்றப்படுகின்றனர். இதுபோன்ற பல பிரச்சினைகள் நாளுக்குநாள் அதிகரித்தே வருகின்றன.

பொதுவாக லண்டன், கனடா, மலேஷியா போன்ற நாடுகளில் உயர் கல்வியைத் தொடர விரும்பும் எமது மாணவர்கள் பலவகையான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பல்கலைக்கழக அல்லது கல்லூரிகளின் அனுமதியை எவ்வாறு பெறுவது? வெளிநாட்டு உயர்கல்விக்கான ஆவணங்களை எவ்வாறு சரியான முறையில் தயார்ப்படுத்துவது? என்பது பற்றிய வழிகாட்டல் இல்லாமையின் காரணமாக வெளிநாட்டுத் தூதரகங்களினால் எமது மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

இவைகள் மட்டுமன்றி Appointments, Appeals, Re-Applications, Interview, தொடர்பாடல், சரியான ஆவணங்கள் எனப் பலவகையான பிரச்சினைகள் மாணவர் மத்தியில் தற்போது நிலவிவருகின்றன. இது போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் எமது தமிழ்பேசும் மாணவர்கள் எம்மைத் தொடர்புகொள்வதன் மூலம் முடியுமான வரை அவர்களது விணணப்பங்கள் வெளிநாட்டுத் தூதரகங்களினால் நிராகரிக்கப்படாமல் சுயமாக இலகுவான முறையில் விசாக்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இவ்வாறான பிரச்சினைகளையும் சிரமங்களையும் எதிர்நோக்கும் மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் 03 222 69104 என்ற இலக்கத்தின் ஊடாகவும் திங்கள் முதல் புதன் வரை 0114203646 என்ற இலக்கத்தின் ஊடாகவும் tmsafreen@yahoo.com. என்ற இணைய முகவரியூடாகவும் றில்வானை தொடர்புகொண்டு இலவச ஆலோசனைகளைப் பெறமுடியும்.

நேரில் சந்திக்க விரும்புபவர்கள் ஈ.பி.எஸ்.சர்வதேச நிறுவனம், 162B, 1/1, முதல்மாடி, காலிவீதி, தெஹிவளை, கொழும்பு என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

# மாத்தறை வர்த்தக மன்றத்தினர் குடாநாட்டுக்கு நல்லிணக்கப் பயணம்

மாத்தறை மாவட்ட வர்த்தக கைததொழில் மன்றத்தைச் சேர்ந்த 30 பேர் அடங்கிய குழு ஒன்று சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு நல்லிணக்கப் பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்தது.

இந்த வர்த்தகத் தூதுக்குழுவினர் யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் யாழ். வணிகர் கழக நிர்வாகசபை உறுப்பினர்கள், யாழ்.வர்த்தகர்கள் மற்றும் யாழ். சிறிய நுண்பாக கைத்தொழில் சம்மேளனப் பிரதிநிதிகள், கைத்தொழில் அதிபர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.


யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடகசு, தெற்கு வர்த்தக மேம்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது, மாத்தறை மாவட்ட வர்த்தக கைத்தொழில் மன்றத் தலைவர் வி.விஜயநந்தன கருத்துத் தெரிவிக்கையில், தமது யாழ்ப்பாணப் பயணத்தின் முக்கிய நோக்கம் இந்த நாட்டில் சமாதானத்தைக் கட்டி வளர்ப்பதும் வர்த்தகர்களுக்கிடையே நட்புறவைப் பேணுவதுமாகும். அத்துடன், தென்பகுதி வர்த்தகர்களிடையே நல்ல கருததுக்களைப் பகிர்தல் என்பதுமாகும் - என்றார்.

யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயராசா கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற பொறுப்பு வர்த்தக சமூகத்திடந்தான் உள்ளது. அதற்கு நிரந்தர சமாதானம் நிலவவேண்டும். அதற்காகத் தென்பகுதிப் பிரதிநிதிகள் என்ற வகையில் தென்பகுதி வர்த்தகர்கள் மக்களிடம் சமாதானம் குறித்துக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயராசா, யாழ்.வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார், சிறிய நுண்பாகக் கைத்தொழில் மன்றத் தலைவர் க.புரணச்சந்திரன், மாத்தறை மாவட்ட வர்த்தக கைத்தொழில் மன்றத் தலைவர் வி.விஜயநந்தன உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-12)



'யமஹா பிளாஸா' நிறுவனத்தினர் தமது வாடிக்கையாளர் நலன்கருதி மோட்டார் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செய்முறைப் பயிற்சிகளை நேற்றுமுன்தினம் வழங்கினர்.

ஜப்பான் யமஹா மோட்டார் சைக்கிள் நிறுவன சாரதிப் பயிற்றுநர் சுசுரோசி இவர, மற்றும் யமஹா பிளாஸா நிறுவன நிர்வாக இயக்குநர் மகேந்திரகுமார், எஸ்.விஸ்வநாதபிள்ளை மற்றும் யமஹா கோர்னர் நிறு வன அபிவிருத்தி உத்தியோகத்தர் சுசில்கமகே ஆகியோர் இப்பயிற்சிகளை வழங்கினர். பயிற்சியின் போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம். (படங்கள்: வசந்தன்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

சிறுப்பிட்டிக்கும் கல்வியங்காட்டிற்கும் இடையில் கைச்செயின் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 48, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33722)

யாக்கோபு தோமஸ் ஜெனிஸியஸின் தே.அ.அட்டை (732872892V), பர்ணாந்து மேரி சகாயராணியின் தே.அ.அட்டை மற்றும் NPGR 9083 மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் என்பன அடங்கிய பேர்ஸ் 01.07.2004 வியாழக்கிழமை முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 5ஆம் வட்டாரம், மண்டைதீவு என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (33732)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 9ஸ்ரீ தொடர் இலக்கமுடைய FORD CORTING CAR விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் மாலை 5.30இற்குப் பின்னர். தொடர்பு: கிறிஸ்ரி, 113A, VEMBADY ROAD, JAFFNA (O.L.R. CHURCH, 4ஆம் குறுக்குத் தெருச் சந்தி). (33720)

ஹொண்டா CD 200 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 424880 (33667)

## வீடு வாடகைக்குண்டு

கோயில் வீதியில் (ஆச்சிரமத்திற்கு முன்) சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: 15A, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். T.P.: 3289 (நிறுவனங்களுக்கு உகந்தது) (33690)

## காணி விற்பனைக்கு

இல.132, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்பு ஆறு குழி காணி விற்பனைக்குண்டு. (வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி அருகில்). (கடை, வைத்திய நிலையங்கள் கட்டுவதற்குச் சிறந்தது) தொடர்பு: யே.அருளானந்தம் (அருள்) 27/5, புது வீதி, கொய்யாத்தோட்டம். (33696)

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட "நாச்சிமார் சோலைக்காடு" அல்லது "சோலை" என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். K.சிவராஜா, "ராஜ வாசா", 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 021 222 3408, 2574199 (33735)

## விற்பனைக்கு

தரமான Prima Broiler, அதிவிசேட பேட்டுக்குஞ்சுகள் 5.7.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm (வட்டுக்கோட்டை)இலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (33483)

விறகு காலை உபயோகத்திற்குரிய தராசு செற் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். மா.புவனேந்திரன், 83/7, பலாலி வீதி (உதவி அரச அதிபர் காரியாலயம் அருகில்), திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (33684)

இறைச்சித்தேவைக்கும் இனப்பெருக்கத்திற்கும் உரிய கடாய் ஆடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (33697)

ஜேர்மன் செப்பெட் அல்ஷேசன் மூன்று மாதங்கள் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிளின்ரன், களபூமி, காரைநகர். T.P.: 0602 212978 (33731)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: விள. இல. 2312, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (சி-35933)

## கண்ணீர் அஞ்சலி

யூரோவில் என்ஜினியேர்ஸ் அன் கொன்ஸ்ரக்ரோன்ஸ் நிறுவன பிரதம பொறியியலாளர் சோ.அனந்தசயனன் அவர்களின் அன்புத் தந்தையார்

**வேலாயுதர் சோதிநாகரத்தினம்**

அவர்கள்கடந்த 28.06.2004 அன்று லண்டனில் காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- யூரோவில் சமூகம். (33703)(43-14-19-24)

## கண்ணீர் அஞ்சலி



கிங்ஸ்ரன் எலெக்ரோனிக்ஸ் உரிமையாளர் ரமேஷ் அவர்களின் தந்தையான **மனுவல்பிள்ளை சிறில்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல.37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33704)(43-14-19-24)

கிங்ஸ்ரன் எலெக்ரோனிக்ஸ் ஊழியர்கள்.

## கட்டட நிர்மாண சேவை

வவுனியாவில் நவீன கட்டடங்களை அமைத்த நிர்மாணக்காரர் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் தமது சேவையை ஆரம்பித்துள்ளனர். நீங்கள் விரும்பும் வடிவங்களில் வீடு, நிறுவனங்கள் அமைத்துத் தரப்படும்.

*தொடர்பு:-* **K.P.S.விஜயன் / குட்டி**
1/20, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(33721)(35-14-19-24)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அகமகிழ 25 - 12 - 1926



அகம் நெகிழ 03 - 06 - 2004

இளைப்பாறிய அதிபர்

**கந்தர் சரவணமுத்து பொன்னையா**

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், மதியபோசன நிகழ்விலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குகன் மில்,*
*கல்வயல், சாவகச்சேரி.*
(சி-35971) (24-14-19)

திரு.சோமசுந்தரம் (சகோதரன்) மற்றும் மக்கள், மருமக்கள், பேரமக்கள்.

## திருமண மங்கல வாழ்த்து

உ

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களான

மணமகன் திருவளர் செல்வன் **பாலசுரேஸ்** (ஜேர்மனி)



மணமகள் திருவளர் செல்வி **றஞ்சினி**

ஆகிய இருவரும்

இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணையும் இன்றைய (03.07.2004) சனிக்கிழமை நன்னாளில் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றிப் பதினாறு பேறுகளும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

சிவன்கோயில் வீதி,
சந்திரபுரம், சாவகச்சேரி.
(33727) (24-14-19)

திரு.திருமதி சி.இராமச்சந்திரன்
(சிறிய தந்தை) குடும்பத்தினர்.

## எமது ஹோட்டலுக்கு

- சப்ளையர்
- ரீமேக்கர்
- சுவீற் மேக்கர்
- ரொட்டி மேக்கர்

ஆகியோர் தேவை.
நேரில் வரவும்.
தொடர்பு:
**திரீ(3)ஸ்ரார் ஹோட்டல்**
162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 3590
(சி-35972)

## COMPUTER TYPING

**by Touch System**

Key board, speed, Accuracy, Letters, Tables, Printout
45 மணித்தியால செயன்முறை வகுப்புகளுக்கு 1,150/-
**STCA** (Estd. in 1977)
149. சிவன் பண்ணை வீதி.
கொட்டடி. யாழ்.
யாழ்ப்பாணம் (வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அண்மையில்).
(33725)

## விற்பனைக்கு

எம்மிடம் அல்சேசன் ஆண் நாய்க்குட்டி ஒன்றும், அல்சேசன் பெண் நாய்கள் இரண்டும், பொமனேரியன் பெண் நாய்கள் இரண்டும் விற்பனைக்கு உண்டு.
*தொடர்பு:* தூரன் பற்றி சார்ஜஸ்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
(33712)

## திருமண வாழ்த்து

உ

திரு.திருமதி குணசிங்கம் தம்பதிகளின் புதல்வி
**சதாயினி** [ரூபி]
(STUDENT IN ACCA, U.K.)
அவர்களுக்கும்

திரு.திருமதி துரைராஜா தம்பதிகளின் புதல்வன்
**சுதாகரன்** [அப்பன்]
(COMPUTER ENGINEER IN U.K.)
அவர்களுக்கும்




இன்று (03.07.2004) சனிக்கிழமை மங்களகரமாக London இல் திருமணம் நடைபெறுகின்றது. இல்லற வாழ்வில் இணையும் புதுமணத் தம்பதிகள் என்றென்றும் மகிழ்வுடனே எண்ணமதை சிறப்பாக்கி வாழ வளமுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
குணசிங்கம் குடும்பம், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

3 ஆம் கட்டை
சிங்கராயர் வளவு,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

# மனித உரிமை மீறல்களின் உச்சக்கட்டம் - சூடான்


அதிபர்
அல்-பஷீர்

உலகில் மனித உரிமைகள் படு மோசமாக மீறப்படும் நாடு என்று ஐ.நா.செயலாளர் நாயகத்தால் வர்ணிக்கப்பட்ட நாடு சூடான். ஆபிரிக்காவின் பெரிய நாடுகளில் ஒன்றான சூடான் 1956 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது முதல் நீண்டகாலமாகவே உள்நாட்டுப் போர்களால் சீரழிந்து வருகின்றது. பைலத் அல்-சூடான் (கறுப்பர்களின் நாடு) என்ற அரபு வார்த்தையில் இருந்தே சூடான் என்ற பெயர் உருவானது. சூடானின் உத்தியோகபூர்வ மொழி அரபு, தேசிய மதம் இஸ்லாம். ஆனால் நாட்டின்

இந்த உடன்படிக்கையின் படி தெற்குப் பகுதிக்கு சுயாட்சி உரிமை வழங்குவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வழிசெய்கிறது.

இதன்மூலம் தென்பகுதிக் கிளர்ச்

ஆனாலும், சூடானில் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் அமெரிக்கா முக்கிய பங்கு ஆற்றுகிறது. இதற்கு சூடானின் பெற்றோலிய வளமே பிரதான காரணம். வளைகுடா நாட்டிலிருந்து தான்பெறும் பெற்றோலியத்துக்கு மாற்றீடாக சூடானின் பெற்றோலிய வளத்தை நம்புகின்றது அமெரிக்கா.

இதேவேளை அமெரிக்காவில் உள்ள தீவிர கிறிஸ்வ அமைப்புகள் சூடானில் உள்ள கிறிஸ்தவர்களின் நலன்களைப் பேணும்படி அமெரிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றன.

**பின்லேடனின் புகலிடம்**

போதாக்குறைக்கு சூடானின் இஸ்லாமிய அரசு சர்வதேச இஸ்லாமியத் தீவிரவாதியும், அமெரிக்காவுக்கு குலைநடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளவருமான ஒஸாமா பின் லேடனுக்கு 90களில் பகிரங்கமாகவே புகலிடம் வழங்கியிருந்தது. ஆகவே அமெரிக்க அதிபர் புஷ்ஷின் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் சூடானுக்கு குறிப்பிடத்தக்க இடம் உள்ளது.

இத்தகைய காரணங்களாலேயே சூடான் விவகாரத்தில் தலையிட்டது.

கும் பழங்குடியினப் பெண்களை அரபுத் தீவிரவாதிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகின்றனர். சூடானில் நாளாந்தம் இடம்பெறும் இந்தக் கொடுமை கடந்த 16 மாதங்களாக டர்வர் பிரதேச நிலைமையை உணர்த்திவிடும்.

இதேவேளை, பழங்குடி இனத்தவரின் சூடான் விடுதலை இராணுவம், நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பு ஆகிய இரு தீவிரவாத அமைப்புக்களும் சாதாரணமானவை அல்ல. கடந்த 16 மாத காலத்தில் 10 ஆயிரம் பேரைத் கொன்று குவித்து விட்டன அந்த அமைப்புகள்.

**ஆயுதங்கள் தாராளம்**

சூடானின் மேற்குப் பகுதிப் பிரதேசமான டர்வரில் தற்போது ஆயுதங்கள் தாராளமாகக் கிடைப்பது அங்கு நிலைமையை மேலும் மோசமாக்கி உள்ளது. தெற்கில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் ஓரளவு தணிந்து விட்டநிலையில் அதில் ஈடுபட்ட கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்களை


இந்த இடையூறுகள் ஒரு புறமிருக்க உதவிப் பொருள்களை சூடானுக்குள் கொண்டு வருவதில் சுங்கத் துறையினர் வீண் காலதாமதம் செய்கின்றனர் என்றும் -

அரச அதிகாரிகள் அனுமதி வழங்குவதில் இழுத்தடிப்பு செய்கின்றனர் என்றும்.

பழங்குடி இனத்தவர்களுக்கான உதவிகளுக்கு முட்டுக்கட்டை போடவே இவ்வாறு அவர்கள் நடந்து கொள்கின்றனர் என்றும் -

தொண்டு நிறுவனங்கள் குற்றஞ் சாட்டுகின்றன.

இப்படி நிலைமை நாளுக்கு நாள சூடானில் மோசமாகிக்கொண்டே செல்கிறது. ஆனால் ஐ.நா.சபையும் சர்வதேச சமூகமும் தமது நடவடிக்கைகளை மிக மெதுவாகவே நகர்த்தி வருகின்றன.


அகதிப் பெண்கள்

சனத்தொகையில் பெரும்பாலான மக்கள் அரபு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள். அத்துடன், இஸ்லாம் மதத்தைப் பின்பற்றாதவர்கள். இந்த நிலையில் நாட்டை ஆளும் இஸ்லாமிய அரசு இஸ்லாமியச் சட்டமான ஷரியத் சட்டத்தை நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது. இதனை கிறிஸ்தவர்களும் பழங்குடியினரும் எதிர்க்கின்றனர்.

இந்த நிலைமையையே சூடான் என்ற நாடு உலகில் மனித உரிமை மீறல்கள் அதிகம் இடம்பெறும் நாடு என்ற அவப்பெயரைப் பெறவேண்டிய

சியாளர்களும், சூடானின் இஸ்லாமிய அரசும் சமாதானத் தீர்வு நோக்கி அடி எடுத்து வைத்துள்ளனர்.

ஆனாலும், பிரச்சினை தீர்ந்தது என்று சூடான் மக்களால் நிம்மதியாக மூச்சுவிட முடியவில்லை.

**கறுப்பினத்தவர்களின் ஆயுதப்போர்**


காரணம் டர்வர் பிரதேசத்தில் இஸ்லாமிய அரசுக்கும் தெற்கு ஆதரவான அரபுத் தீவிரவாதிகளுக்கும் எதிராக கறுப்பினப் பழங்குடியினர் ஆயுதப் போராட்டத்தை கடந்த ஆண்டு ஆரம்பித்து விட்டனர். இந்தப் போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை

உலக வலம்
நாடோடி

அமெரிக்கா அதன் அனுசரணையுடன் நீண்டகால உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் டர்வர் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் அடுத்த உள்நாட்டுப் போர் இப்போது அடுத்த தலைவலியாக அமெரிக்காவின் முன் எழுந்துள்ளது. சூடானின் அதிபர் உமர் ஹஸன் அல்பஷீர் அடிப்படையில் ஓர் இராணுவ அதிகாரி என்பதால் அவர் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் ஏறுமாறானவையாகவே உள்ளன. அத்துடன், அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் அரபுத் தீவிரவாதிகளுக்கு அவர் வழங்கும் ஒத்துழைப்பு டர்பர் பிரதேசத்தில் மனித உரிமைகள் தூக்கியெறியப்படக் காரணமாக உள்ளன.

இதற்கு உதாரணமாக அரபுத் தீவிரவாதிகள் ஆபிரிக்கக் கிராமங்களில் மேற்கொள்ளும் பாரிய பாலியல் வல்லுறவுகளை கூறலாம்.

ஆபிரிக்கப் பழங்குடி இனத்தவரின கிராமங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அதனைச் சுற்றிவளைக்கின்றனர் அரபுத் தீவிரவாதிகள். அங்குள்ளவர்களை ஆண்கள் ஒருபகுதியாகவும், பெண்கள் ஒருபகுதியாகவும்



விலைபேசும் சந்தையாக டர்வர் பிரதேசத்தை மாற்றிவிட்டனர். போதாக்குறைக்கு இராணுவத்தினரும் கறுப்புச் சந்தையில் ஆயுதத் தரகர்களாக மாறிவிட்டனர். இது நிலைமையை மேலும் அதலபாதாளத்தில் தள்ளி விட்டது.

**பாலைவனத்தில் தஞ்சம்**

இதற்கிடையில் தீவிரவாதிகளின், கொலை, அச்சுறுத்தல்கள், பாலியல் வல்லுறவுகள், சூறையாடல்கள் போன்றவற்றிலிருந்து தப்புவதற்காக சுமார் 10 லட்சம் மக்கள் - இவர்களில் பெரும்பாலானவர்கள் கறுப்பினப் பழங்குடியினர் - பாலைவனப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தப் பாலைவனப் பகுதிகளில் அகதிகளுக்கு இருப்பிடம் உணவு, அடிப்படை வசதிகள் போன்றவற்றை வழங்க பாரிய இடையூறுகளை எதிர்கொள்ள நேரிடுவதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

**மற்றொரு றுவாண்டாவாக மாறுமா சூடான்?**

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அரசியல் ஆய்வாளர்கள், மற்றொரு ஆபிரிக்க நாடான றுவாண்டாவில் 1994ஆம் ஆண்டில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளைத் தடுப்பதில் ஐ.நா.தோல்வியுற்றதைப் போலவே சூடானிலும் பேரவலத்தைத் தடுப்பதில் ஐ.நா.மீண்டும் தோல்வியுறப் போகிறது என்று தெரிவித்துள்ளனர். அத்தகைய ஒரு நிலை சூடானில் ஏற்படாமல் தடுக்க அங்கு ஐ.நா. அமைதிப்படையை பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்ற குரல்கள் தற்போது எழத் தொடங்கியுள்ளன.

ஆனாலும் அதற்கான செலவு ஐ.நா.சபையை பின்னடிக்கச் செய்வதாக கருதப்படுகிறது. ஆபிரிக்க நாடான சியாராலியோனில் உள்ள ஐ.நா.அமைதிப் படையே இதுவரை ஒரு நாட்டின் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாரிய அமைதிப் படையாகும். ஆனால் சியாரா்லியோனைவிட சூடான் 35மடங்கு பெரிய நாடாகும். ஆகவே, சியாராலியோனைவிட பாரிய அமைதிப்படை ஒன்றும், அதற்கான செலவாக பல லட்சம் டொலர்கள் பணமும் ஐ.நாவுக்குத் தேவைப்படுகின்றன. இவற்றைத் திரட்டுவது இலகுவான காரியமல்ல. இதனாலே சூடானின் டர்வர் பிரதேசத்தில் இடம்பெறும் பேரவலங்களை தடுப்பது குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாமல் தடுமாறுகிறார் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான். எது எப்படியானாலும் ஐ.நாவும் சர்வதேசசமூகம் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் சூடானில் மனிதப் பேரவலம் ஒன்று இடம் பெறுவது நிச்சயம்! அது மனிதகுல வரலாற்றில் ஒரு கறையாகத் தொடர்வதும் உறுதி.


வெறிச்சோடிய கிராமம்

- உள்நாட்டுப் போரால் நாசமாகும் சூழ் நிலைக்குத் தள்ளியுள்ளது. பாலைவனம், மலைப்பிரதேசம், சதுப்பு நிலம், மழைக்காடுகள் என்று பல்வேறுபட்ட நிலப்பரப்புக்களைக் கொண்டது சூடான். விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்ட சூடானில் தங்கச் சுரங்கமும் பருத்தியும் உப வருமானத்தை ஈட்டித்தருகின்றன. பெற்றோலிய வளமும் அங்கு உண்டு.

**உள்நாட்டுப்போர்**

1956 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது முதல் இன்று வரையான காலப்பகுதியில் உள்நாட்டுப் போர் இடம்பெறாத காலம் மிகவும் சொற்பமே. வடபகுதி முஸ்லிம்களுக்கும், தெற்கில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மற்றும் ஆபிரிக்க பழங்குடியினருக்கும் இடையே மூண்ட உள்நாட்டுப் போர் 1983 ஆம் ஆண்டு உச்சக்கட்டத்தை அடைந்தது. இதில் சுமார் 20 லட்சம் பேர் உயிரிழந்தனர். லட்சக்கணக்கானவர்கள் அகதிகள் ஆயினர். ஆபிரிக்காவில் நீண்டகாலம் இடம்பெற்ற உள்நாட்டுப் போராக இது கருதப்படுகின்றது.

கென்யாவில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்களை அடுத்து 2002 ஆம் ஆண்டு அரசும் தென்பகுதி தீவிரவாதிகளும் ஆபிரிக்காவின் நீண்டகால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 10 லட்சம் பேர்வரை அகதிகளாகினர்.

டர்வர் பிரதேசத்தில் அரபுக்களுக்கும், பழங்குடியினருக்கும் இடையே நீண்டகாலமாக பிணக்கும், பகைமையும் இருந்து வந்தன. இந்நிலையில் கென்யாவில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்களில் டர்வர் பிரதேச கறுப்பின அமைப்புக்களுக்கு இடமளிக்கப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பழங்குடி இனத்தவர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

**அமெரிக்கா அக்கறை?**

சூடானின் உள்நாட்டுப் போரில் அதன் அயல் நாடுகளான உகண்டா, லிபியா, எகிப்து போன்ற நாடுகளும் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றின. போதாக்குறைக்கு அமெரிக்காவும் தலையிட்டது. சூடான் விவகாரத்தில் அமெரிக்காவின் அக்கறை சுயலாபம் கருதிய ஒன்றாகும். எப்போதும் பிற நாடுகளின் எண்ணெய் வளம் மீது அமெரிக்கா கண்வைப்பது வழக்கம். சூடானிலும் அதுவே தொடர்கதையாக உள்ளது. இத்தனைக்கும் பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடாகவே சூடானை அமெரிக்கா குறிப்பிடுகிறது. சூடானுடனான அமெரிக்காவின் இராஜதந்திர உறவுகளும் அப்படியொன்றும் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை.




பிரிக்கின்றனர். பின்னர் ஆண்களை கடுமையாகத் தாக்கி விரட்டிவிடுகின்றனர். இளமையான அழகிய பெண்களைத் தனிமைப்படுத்தி மற்றவர்களைத் தாக்கி விரட்டி விடுகின்றனர். தனிமைப்படுத்தப்பட்டு பருந்திடம் சிக்கிய கோழிக்குஞ்சாக அஞ்சி நடுங்

# வீட்டுத்தோட்டத்தில் நின்ற பயிர்கள் இனந்தெரியாதோரால் வெட்டி அழிப்பு

## தெல்லிப்பழை கிழக்கில் சம்பவம்

வலி.கிழக்கு,ஜூலை3

வீட்டுத்தோட்டத்தில் இருந்த பயன்தரும் பயிர்கள் நாசமாக்கப் பட்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் தெல்லிப்பழை கிழக்கு மாதனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவு வேளை வீதி விளக்கு களை அணைத்த குழு ஒன்று வீட்டுத்தோட்டத்துக்குள் புகுந்து தென்னங் கன்றுகள், வாழை, தேசி போன்ற பயன்தரு மரங்களை வெட்டி வீழ்த்தி விட்டு தப்பிவிட்டதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் அச்ச நிலையை ஏற படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-180)

## தவறிவிட்டது

பெறுமதிமிக்க தங்க ஆபரண மொன்று 29.06.2004 செவ்வாய்க்கிழமை இளவாலையிலிருந்து கந்தரோடை வயலூடாக உடுவிலுக்கு வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொலைபேசிஇல: 0777- 250848 உடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(33728)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த பாலசிங்கம் விஜேன்ரன் என்பவருடைய இன்சூரன்ஸ், மோட்டார் சைக்கிள் அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன நெல்லியடிக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் கோகிலா தேநீர்ச் சாலையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P.0777759432
0776150646 (33738)(35)

## பரிசளிப்பு விழா

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், கணனி கற்கை நிலையத் திறப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணியளவில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் க.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி டி.எம்.சுவாமிநாதன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக்கான ஐ.நாவின் முன்னாள் பிரதிநிதி சார்ளி மகேந்திரன், திருமதி சந்திரா மகேந்திரன் தம்பதியினர் கலந்து கொள்வர். நிறுவுநர் நினைவுப் பேருரையை ந.விவேகானந்தராஜா நிகழ்த்துவார். (எ-185)

## ஆள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. இன்றிலிருந்து நான்கு நாள்களுக்கு முன்னர் கீழுள்ள முகவரியில் அல்லது தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பொ.தனபாலசிங்கம்,
குமரன் கொம்யூனிக்கேஷன்,
27,சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
2222765
2225469 (C/35981)

## கண்ணீர் அஞ்சலி



**சச்சிதானந்தசிவம் ஞானசீலன்**
**(B.Com., Acc SPC) (வட்டக்கச்சி)**

இந்தியாவில் அகாலமரணமடைந்த எமது ஆருயிர் நண்பன் ஞானசீலனின் பிரிவு எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. அவருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (33747)(35-13-11-32) **வளாக நண்பர்கள் (96/97)**

## "மனோஜ்" கைவேலை அழகுக்கலை நிறுவனம்

**மங்கையர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!**

கட்டணம் ரூபா 1000/= (ஒவ்வொரு பகுதியும்)

பெண்களுக்கான
- அழகுக் கலை
- மணப்பெண் அலங்காரம்
- திரைச் சேலை வடிவமைப்பு

மற்றும்
- (பச்வேக்) ~ அலங்காரத் தையல்

சகல விதமான பெயின்ரிங், கேக் ஐஸிங், இதர வகுப்புகளும் நடைபெறவுள்ளன.
ஒருமாத காலத்தில் பயிற்சிமுடித்து சான்றிதழும் வழங்கப்படும்.
பயிலவிரும்பும் மாணவர்கள் இன்று 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 021 222 7598
17 ஆம் கட்டை முன்பாக கீரிமலை றோட், பண்டத்தரிப்பு.
7/3, யாழ்.வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.
(33744)(34-32-13)

## 44ஆவது பிறந்த நாள் நினைவலைகளும் 264ஆவது நாள் நினைவஞ்சலியும்

தோற்றம் 03 - 07 - 1960



மறைவு 12 - 10 - 2003

**திருமதி தயாபரி ஆனந்தகுமார்**

நெஞ்சுருக்கும் நினைவலைகளுடன்
பாசமலர்களாய் என்றும் உம் நினைவுகளுடன்.

11, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (33741)(13-32) கணவன், பிள்ளைகள்.

## திருமண வாழ்த்து

ஜேர்மனி புனித தோமஸ் தேவாலயத்தில் இன்று (03.07.2004) சனிக்கிழமை திருமண பந்தத்தில் **இல்லறமே நல்லறம் எனும்படி இணையும்**

மணமகன்
திருவளர் செல்வன்
**கொட்வின்**

மணமகள்
திருவளர் செல்வி
**ஏஞ்சல்**

இருவரையும் அன்புள்ளங் கொண்ட பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்களுடன் சேர்ந்து கிறிஸ்து அரசரின் திருவருட் துணையுடன் பல்லாண்டு காலம் பதினாறு பேறுகளும் பெற்றுச்சிறப்புடன் வாழவேண்டும் என வாழ்த்தும்

அன்பு நண்பன்
கா.பாஸ்கரன்.

இல.½, புது வீதி.
கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
(33742)(34-32-13)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ!

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆனி 20 ஆம் நாள் நாளை (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 1.05 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்,

மணமகன்
திருவளர் செல்வன்
**குகதாஸ்**
(தீபனா ஜூ வல்லறி,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)



மணமகள்
திருவளர் செல்வி
**விஜயா**
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச, செயலகம், கரவெட்டி)

நல்லூர் சட்டநாதர் வீதி, திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமாங்கல்ய தாரணம் நடைபெறவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி பரமேஸ்வரி கனகசபாபதி.**
பூநாறி மரத்தடி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**திரு.திருமதி S.கணேசமூர்த்தி**
சந்தை வீதி, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

( இரு வீட்டார் அழைப்பு)

(33748)(34-32-13)

## சாவகச்சேரி குடும்ப நீதிமன்றம்

## அழைப்புக் கட்டளை

இல.377/ம.நீ

வசந்ததேவன் பரந்தாமன்
பெண் சிவநந்தினி
வளர்மதி, மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

வழக்காளி

எதிராக

வசந்ததேவன் பரந்தாமன்
தேவரையாளி - நெல்லியடி வடக்கு
கரவெட்டி.

எதிராளி

மேற்படி எதிராளிக்கு,

மேற்படி வழக்காளி தங்களிடமிருந்து மணநீக்கம் பெறுவதற்கு இந்த நீதிமன்றில் உமக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளாராதலினால், இவ்வழக்குக்கான பிராதுக்கு உமது மறுமொழியை 2004ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இந்நீதிமன்றில் கோப்பிடுமாறு வேண்டப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மறுமொழியை அணைக்கத் தவறும் பட்சத்தில் எதிராளியான நீவீர் இல்லாமலே ஒருமுகவிளக்கத்திற்கு எடுக்கப்படும் என்பதை அறிந்துகொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீங்கள் தோன்றாவிடின் சட்ட முறையான அறிவித்தலுக்கான யாவற்றையும் சேர்ப்பிக்கக்கூடிய முகவரி ஒன்றை மன்றில் கூப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
V.நடராஜா
பதிவாளர்
சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம

2004ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 22 ஆம் திகதி
வரைபு:
செ. பாலகிருஷ்ணன்
வழக்காளியின் சட்டத்தரணி.
(35982)(21-32-13)

## Jayoda ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7246498 முதல் 7258221 வரை
சீட்டிழுப்பு இல. 46 திகதி 01-07-2004

வெற்றி எண்கள்: **4 9 1 9 7 1** சுப்பர் எண் **24**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,14,49,675/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,14,49,675/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 104 | 5,000/- | 5,20,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,045 | 500/- | 5,22,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,462 | 50/- | 5,23,100/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,03,651 | 10/- | 10,36,510/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 101 | 1,000/- | 1,01,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,053 | 100/- | 1,05,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,367 | 20/- | 2,07,340/- |
| மொத்தம் | 1,26,807 | | 55,75,750/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,75,750/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,17,40,500/-**

தொடர் இல. 6283827 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 05 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7252302-0-17
7256934-6-17
7253600-9-53
7247888-0-90
7247054-9-90

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## கண்ணீர் அஞ்சலி

(யாழ். பல்கலைக்கழக கணிதத்துறை முதுநிலை விரிவுரையாளர்)

### கலாநிதி ம.ஸ்கந்தராஜா



எமது சக விரிவுரையாளரின் திடீர் மறைவு எமது பல்கலைக்கழகத்திற்கு பேரிழப்பாகும்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(33755)(36-11-16)

## IN TREASURED MEMORY OF

**Dr.M.SKANDARAJAH M.Sc., Ph.D.**
(Senior Lecturer Dept.of Mathematics & Statistics)
University of Jaffna



WE HIDE OUR TEARS
DEEP IN OUR HEARTS
WITH TREASURED MEMORIES OF YOU
THOUGH YOU HAVE GONE, DEAR SIR,
MEMORY OF YOU
WILL BE RETAINED
IN OUR HEARTS FOREVER

**AFFCTIONATELY REMEMBERED BY YOUR STUDENTS.**
**Academic Year 1995/1996**

(33747) (37-11-16-36)

## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளு மின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

மூல வருத்தம், தோல் நோய்கள், ஆண்மைக் குறைவு, குழந்தைப் பேறின்மை போன்றவற்றிற்கு சிறப்பு மருத்துவம் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
Dr.R.K .நவநீதன் DYNS.SMP.NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ்.பயணியர் விடுதி
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.

யோகாசனப் பயிற்சி வகுப்புக்களுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.

(26167) (32-12-16)

முகாம் நடைபெறும் நாள்கள்:
03.07.2004 முதல் 10.07.2004 வரை

## நூல் வெளியீடு

"நகைச்சுவைக் கதம்பம்" நூல் வெளியீட்டு விழா நாளை பி.ப 3 மணிக்கு மரு தனார்மடம் இராமநாதன் கல்லூரியில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன தலைமையில் இடம்பெறவுள்ளது.

செ..நடராசா எழுதிய இந்நூலின் வெளியீட்டுரையினை தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராசாவும் மதிப்பீட்டுரையை இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசுவும் நூல் ஆய்வுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் பா.மகாலிங்கசிவமும் நிகழ்த்தவுள்ளனர்.(ஒ-9-49)

## வர்த்தகருக்கு அபராதம்

வர்த்தக விடுமுறைதினமான ஞாயிற்றுக்கிழமையன்று திருநெல்வேலிப் பகுதியில் வியாபார நிலையத்தை திறந்து விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர் ஒருவருக்கு நல்லூர் வணிகர் கழகம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக கிழமைகளில் மூடி ஒத்துழைக்குமாறு வணிகழகம் அறிவித்திருக்கிறது. இந்த அறிவித்தலை மீறியதனாலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-9-180)

## உடன் தேவை

★ பார்சல் மேக்கர்
★ பில்கிளாக்
★ ரீமேக்கர்

45 வயதிற்கு மேற்பட்டோர் மேற்கூறிய வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் உடன் நேரில் வரவும்.

சரஸ்வதி விலாஸ்
195(57), கே.கே.எஸ்.வீதி
யாழ்பாணம்.

(37757)(36)

**நாகம்ஸ்** சுன்னாகம்



அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க ரஜனி, சௌந்தர்யா, ரம்மியாகிருஷ்ணன் நடித்த

**படையப்பா**

தினசரி: 11.00, 3.00, 7.00 பு.நே.

(C/35739) (12)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை



சரத்குமார், தேவயானி, செந்தில் நடித்த

**மகாபிரபு**

தினசரி: 11.00, 2.45, 6.00 (டிதே)
வெள்ளி, சனி, ஞாயிறு
**EXTREMITIES** [இரவு 8.45]

(C-35653)(12)

## எளிமை ஆசானுக்கு கண்ணீர் அஞ்சலி

### கலாநிதி ம.ஸ்கந்தராஜா
- M.Sc., Phd (Alberta)
(யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்)



அவர்கள் (30.06.2004) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தமை எம்மை ஆழ்ந்த துயரத்துக்குள்ளாக்கியுள்ளது. அமரருக்கு எமது கண்ணீரஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்,
மிலேனியம் றெஷ்ரோரன்ற்
அன் மில்லேனியம் கெஸ்றஹெளஸ்.

(33752)(43-11-16-36)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராசா (நடேசு)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 30.06.2004 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கமலம் தம்பதிகளின் மருமகனும் வரதேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பார்வதி, இராசரத்தினம் மற்றும் நாகபூசணி, திருச்செல்வம் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரனும் மங்களநாயகி, ரஜனி, காலஞ்சென்ற ஜெயா, ஜெயந்தி (சுவிஸ்), சுயேந்தி (சுவிஸ்), சாந்தி (உபதபாலதிபர் சுருவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தில்லைநாதன், சிவகுமார், திருவருட்செல்வம (சுவிஸ்), கேதீஸ்வரன் (சேந்தன் சுவிஸ்), ஜெமினி காந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் அமிர்தவல்லி, பரமலிங்கம், நாகேஸ்வரி, செல்வராசா, காசிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுருவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*

(33753) (37-11-16-36)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

### செல்வன் ஈஸ்வரலிங்கம் ராகவன் (M.Sc - Eng.)



ஏழாலை தெற்கு, விழுசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு லண்டனில் வசித்தவரும் ஈஸ்வரலிங்கம் - செல்வதி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன் ராகவன் 26.06.2004 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் ஜனகன் (பொறியியலாளர் - கனடா), பகீரதி (பட்டதாரி ஆசிரியை), லவகுசன் (கணக்காளர்) ஆகியோரின் பேரன்புக்குரிய சகோதரரும், கவிதாவின் மைத்துனரும், ஸ்ருதியின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2004) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணியளவில் பொரளை ஜெயரட்ண மண்டபத்தில் ஆரம்பமாகி பின்னர் 5 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

*தொடர்புகளுக்கு:-*
*த.ஈஸ்வரலிங்கம்*
*35, கௌடான ரோட், தெகிவளை.*
*T.P.:011 4202163*

(ச-35976) (37-11-16-36)

தகவல்:
தமிழ்ப் பொதுப்பணி மன்றம்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

# கரும்புலிகள் நினைவாக

## நிதர்சனம் நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்

கரும்புலிகளின் உள்ளத்துணர்வுகளை பாட்டாகவும் படமாகவும் விவரணமாகவும்

## நெஞ்சுக்குள்ளே நெருப்பூட்டும்



ஞானரதனின்
**புயல் புகுந்த பூக்கள்**
(வீடியோ படம்)

இசைவாணர் கண்ணனின் இசையில்
**கடற்கரும்புலிகள் பாகம் 8**
(பாடல் இசைத்தட்டு)

உயிராயுதம் பாகம் 5 (கரும்புலி நினைவுகளின் காட்சித் தொகுப்பு)
வீடியோ விவரணம் ஜூலை 5 முதல் தாயகமெங்கும்...

விளம்பர அனுசரணை:

புதுமையென்றால் அது முத்தொளிதான்!
உங்கள் அனைத்து மங்களகரமான வைபவங்களுக்கும் முற்றிலும் டிஜிற்றல் முறையில் படம் பிடித்திட நாடுங்கள்

**முத்தொளி**

கோண்டாவில்,
தில்லையம்பதி.

# திருடப்பட்ட மோ. சைக்கிள் அரசியல்துறையினரால் மீட்பு

யாழ். நகரில் கடந்தமாதம் 4ஆம் திகதி திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை யாழ். பிரதேச அரசியல் துறையினர் நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியில் நேற்று மீட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்தப்பட்டவேளை இந்த மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயிருந்தது. அதன் உரிமையாளர் இது குறித்து யாழ். பிரதேச அரசியல்துறையினரிடம் முறையிட்டிருந்தார்.

இதனையடுத்து விசாரணை நடத்திய அரசியல்துறையினர் இலக்கத்தகடு மாற்றப்பட்ட நிலையில் மேற்படி மோட்டார் சைக்கிளை ஒருவரிடமிருந்து மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். (ஒ)

# மார்லன் பிராண்டோ காலமானார்!

லொஸ்ஏஞ்சல்ஸ், ஜூலை3



உலகின் புகழ்பெற்ற ஆங்கிலத் திரைப்பட நடிகர் மார்லன் பிராண்டோ (வயது-80) அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகர மருத்துமனையில் நேற்றுக் காலமானார்.

'கோட் பாதர்', 'வோட்டர் புரன்ட்' உட்பட பல திரைப்படங்களில் நடித்த இவர், சிறந்த நடிகருக்கான 'ஒஸ்கார்' விருதை இரண்டுமுறை பெற்றிருந்தார்.

மறைந்த நடிகர் சிவாஜிக் கணேசனை விமர்சகர்கள் பிராண்டோவுடன் ஒப்பிட்டு விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# இளையோர் விளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறும். தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகும்.

விளையாட்டு விழாவில் இரண்டு நாள்களும் இரவு, பிரமாண்டமான வாணவேடிக்கை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.கே.விமல்ராஜன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர்கள் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கின்றனர்.

விளையாட்டுப் போட்டியைக் காண வரும் பொது மக்களுக்கு தேவையான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-9-10)

## கரும்புலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொட்டிலடி, மாகியப்பிட்டி, அளவெட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், உடும்பிராய், கோண்டாவில், கோப்பாய், புத்தூர், அச்சுவேலி ஆகிய இடங்களுக்கும் ஊர்தி செல்லும்.

நாளைமறுதினம் காலை 8 மணிக்கு புறப்படும் ஊர்தி கைதடிச் சந்தி, சாவகச்சேரிச் சந்தி, கொடிகாமம், வரணி ஊடாக நெல்லியடியைச் சென்றடையும். (ஒ-3-30)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்துவது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஒரு போதும் முடிவு எடுக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பது பற்றியதான பேச்சுக்களில் ஈடுபடவே முடிவு செய்துள்ளது. அத்தகைய பேச்சுக்கள் தொடரும் அதே சமயத்தில் இடைக்காலத் தன்னாட்சி தொடர்பாகவும் பேசலாம் என்றே அது கருதுகிறது - என அவர் தெரிவித்துள்ளார்.

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யட்சகர் எஸ்.வானகுரு மற்றும் கடற்படை அதிகாரிகளும், விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்து கொண்டனர்.

மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், தடைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது. எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஒ-3)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சினைக்கு அமைதித்தீர்வு காண்பது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் குறித்து அப்போது புதுடில்லி அதிகாரிகளுக்கு அவர்கள் விளக்கமாக எடுத்துரைப்பர் என்று தெரிகின்றது.

புதுடில்லியில் இந்தியப் பிரதமரின் பாதுகாப்புத்துறை அலோசகர் ஜே.என்.டிக்ஸிற்றையும் அவர்கள் சந்தித்து உரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் - எதிர்வரும் புதனன்று - எரிக் சொல்ஹெய்ம் லண்டனில் தம்மைச் சந்திப்பார் என்பதை மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்று உறுதிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பு பெரும்பாலும் லண்டனில் பாலசிங்கத்தின் இல்லத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கருணா விவகாரத்துக்கு ஒரு முடிவு காணாமல் சமாதானப் பேச்சு முன்நகர்வதற்கு இடமேயில்லை என்ற கடுமையான விடாப்பிடிப் போக்கில் புலிகளின் தலைமை தீவிரமாக இருப்பதாகத் தெரிகின்றது.

ஒருபுறம் கருணாவுக்குத் தட்டிக் கொடுத்துக்கொண்டு மறுபுறம் சமாதானப் பேச்சு என்று இலங்கை அரசு இரட்டை வேடம் போடுவதை ஏற்க முடியாது; அதற்கு விட்டுக்கொடுக்க முடியாது என்ற புலிகளின் தலைமையின் நிலைப்பாட்டை சொல்ஹெய்முடனான சந்திப்பின்போது பாலசிங்கம் பிரதிபலிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தாயக மீட்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாத்திய இசையுடன் நெல்லியடி மில்லர் சதுக்கத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

தீவுப்பகுதியில் புங்குடுதீவு பெருங்காட்டுச்சந்தி, கந்தசாமி கோவிலடியில் 5ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெறும்.

முன்னதாக புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முன்றிலில் இருந்து கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் பாண்ட் வாத்திய இசையுடன் நிகழ்வு இடம்பெறும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றல், கரும்புலிகளுக்கு மலரஞ்சலி, ஈகச்சுடரேற்றல், நினைவுரைகள், எழுச்சிக் கலைநிகழ்ச்சிகள், இசைநிகழ்ச்சி என்பன இடம்பெறவுள்ளன. விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் இந்நிகழ்வுகளில் உரைநிகழ்த்துவர்.

'போக்குவரத்து வசதிகள் உட்பட அனைத்து ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

**எழுச்சிப் பேரவை சிரமதானம்**

கரும்புலிகள் நாளையொட்டி யாழ். பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையால் சிரமதான நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரியகுளம் முற்போக்கு இளைஞர் கழக முன்றில், கொழும்புத்துறை சனசமூக நிலையம், முன்பள்ளி சுற்றாடல், கிறீன்பீல்ட் ச.ச.நிலையம், மடத்தடி சனசமூகநிலையம், றெக்கிளமேசன் பகுதியிலுள்ள பொதுக் கிணறு என்பன அவ்வட்பகுதி தேசிய எழுச்சிப் பேரவையினர் மற்றும் பொது மக்களால் துப்புரவு செய்யப்படவுள்ளன என்று யாழ். பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் எஸ்.செழியன் தெரிவித்துள்ளார்.

கரும்புலிகள் தினத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் வர்த்தகர்களைக் கோரியுள்ளது. சிரமதானப் பணிகளை மேற்கொளவதுடன் கரும்புலிகள் நினைவாக நினைவுப்பந்தல் அமைத்து நினைவுப் பாடல்களை ஒலிக்கவிடுமாறும்- மஞ்சள் - சிவப்பு கொடிகள் கட்டி வீதிகளை அலங்கரிக்குமாறும் சம்மேளனம் கேட்டுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் கரும்புலிகள் தின நிகழ்விலும் சகல வர்த்தகர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சமமேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

1987 ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாமை வெடிகுண்டுகள் நிரப்பட்ட ட்ரக்குடன் சென்று தாக்கி அழித்து தனது உயிரையும் ஈகம் செய்த முதல் கரும்புலி கட்டன் மில்லரின் நினைவாக இத்தினம் கரும்புலி நாளாக அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-3-4-12-30-31)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சேர்ந்த சிலர் புல்மோட்டைக் கிராமத்துக்குச் செல்ல நேற்றுமுன் தினம் புறப்பட்டனர் என்றும் -

அவர்கள் யான் ஓயா சோதனை நிலையத்தைத் தாண்டிய வேளை அங்கிருந்த இராணுவத்தினர் அவர்களைத் தடுத்தனர் என்றும் -

தங்கள் உயரதிகாரிகளுடன் கதைத்த பின்னர் தமது கண்காணிப்புடனேயே அரசியல்துறையினர் புல்மோட்டை செல்லமுடியும் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர் என்றும்-

இதனை ஏற்காத எழிலனும் அவரது சகாக்களும் புல்மோட்டை செல்லாது திரும்பிவிட்டனர் என்றும் - கூறப்படுகிறது.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை அலுவலகத்தில் எழிலன் முறையிட்டுள்ளார். (ஒ)


**ARIVOLLI**
NALLUR
CHEMISTRY
A/L - 2005.
Physical Che.
Sat., Sun. - 6 - 7. p.m.
By: J ஜெயந்தன் B.Sc.
(33683)

GROUP CLASSES
CHEMISTRY
DIAS B.Sc. (HONS) Spl. Che.
அலகு, ஆண்டு ரீதியான துரித மீட்டல்
COM-MATHS
M.SRI B.Sc. PAPER CLASSES
104/4, குறுக்கு வீதி, அத்தியடி. (33643)

**கணக்கீடு**
A/L 2005 பிரிவு I
கம்பனி ஆரம்பம்: சனி 5.00 p.m.
A/L 2005 பிரிவு I
ஒற்றைப்பதிவு
ஆரம்பம்! சனி 8.30 a.m.
A/L 2005 பிரிவு II
சொத்துவிற்பனை
ஆரம்பம்! திங்கள் 4.30 p.m.
ஆசிரியர் S.தவா
B.Com. (Hons) (Acc.spl.)
NEW SCIENCE COLLEGE
JAFFNA (33606)(40)

**NEW SCIENCE CENTRE**
யாழ். நகர்.
A/L - DAY CLASS
CHE. - அன்பழகன்
PHY. { ஜெயசீலன் / பிரபா
BIO. { தற்பரன் / திவாகர்
MATHS - ஜெயந்தன்
இரசாயனவியல் கருத்தரங்கு இவ்வாரம் நடைபெறும்.

**புலமைப்பரிசில் கருத்தரங்கு**
தரம் 5
மாணவர்களுக்கான விசேட புலமைப் பரிசில் கருத்தரங்கு
காலம்: 04.07.2004 (ஞாயிறு) - ஆரம்பக் கருத்தரங்கு
11.07.2004 (ஞாயிறு) - 2ஆவது கருத்தரங்கு
25.07.2004 (ஞாயிறு) - 3ஆவது கருத்தரங்கு
நேரம்: காலை 9.00 - மாலை 4.00 மணிவரை
இடம்: நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
கொழும்பு பிரபல தேசிய பாடசாலை ஆசிரியர் திரு.எஸ்.ஏ.சந்திரபவான் (Dip-in-Teach)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**CAREER.COM INSTITUTE**
aat Stage II விரிவுரைகள் ஆரம்பம்: 03.07.2004 காலை 9.30 மணி
விசேட சலுகை
A.L பெறுபேற்றின் அடிப்படையில்
3A Students 75 %
2A Students 50%
1A Students 40%
FREE
இச்சலுகை
* aat Stage I
* CAT - Certified Accounting & IT LE I
CMA - Certified Management Accountants of SriLanka Foundation Stage மட்டும்.
CMA (SriLanka) - கனடா CMA யின் அங்கீகாரம் பெற்ற கற்கை நெறியாகும்.
A/L 2004 மாணவர்களுக்கு பரீட்சை பெறுபேறு கிடைக்கும் வரை 100 % கட்டணச் சலுகை.
அலுவலக நேரம் : திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு 10 a.m. -2 p.m.
# 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C/35948)(40-11-16)

**தென்மராட்சியில் ஒரு புதிய உதயம்**
தென்மராட்சி A/L மாணவர்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்....!
சாவகச்சேரி மண்ணில் BRIGHTEN கல்வி நிலையத்தில்,
வடமராட்சி MODERN கல்வி நிலைய ஆதரவில்
ஆரம்பம்: 10.07.2004
*A/L கலை, வர்த்தக வகுப்புக்களும் * A/L பகல் நேர வகுப்புக்களும் (Day)
* யாழ். மாவட்ட புகழ்பூத்த ஆசிரியர்களின் சங்கமம்.
* அனுமதிகள், நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
- நிர்வாகம்.
(33676)(40-11-16)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சல்



இளைப்பாறுகை 19 09 1931

இசையாக 15 07 2003

திதி :03-07-2004

நாதஸ்வர கலாநிதி, கலாசூரி

### அமரர் அளவையூர் N. K. பத்மநாதன்

மூச்செனும் காற்றே நாதமாகி
நாதமெனும் காற்றே உடலாகி
உடலெனும் காற்றால் வெளி நிரப்பி
காலத்தைக் கடந்தாய்
கடவா நினைவுகளின் முழுவருடம் தாங்கி.

கில்னர் ஒழுங்கை
யாழ்ப்பாணம் (C/35953) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லையா



சாவகச்சேரி, மீசாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், மேதர்ஸ் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லையா நேற்று (02.07.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற பாலன் குஞ்சி ஆகியோரின் மருமகனும் வள்ளிப்பிள்ளையின் அன்புக கணவரும் செல்வராணி, செல்வராசா, செல்வரட்ணம், செல்வநாயகி, நவரட்ணம், நாகராஜா, சிறிகாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவஞானம், புஸ்பராணி, புவனேஸ்வரி, புஸ்பராஜா, தாமரைச் செல்வி, விஜயகுமாரி, கேமலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜரின், அனுஷா-ரணில் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*54, மேதர்ஸ் ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (33758)(11-16)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.